- ஒரு நிறுவனத்தின் ஆளணியின் உறுப்பினர்கள் தங்களிடையே பகிர்ந்து கற்பதற்கும், சிறந்த நடைமுறைகளைப் பிரசுரிப்பதற்கும், ஒவ்வொருவரின் சாதனைகளையும், பங்களிப்புக்களையும் மற்றையவர் பாராட்டவும் உள்வாரி நியம உறுதிப்படுத்தல் (QA) பொறிமுறைகள் அவர்களை ஒன்றினைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், உள்வாரி நியம உறுதிப்படுத்தல் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்தல், நிறுவனமெங்கும் பொறுப்புணர்ச்சியையும், செயல்முறை அணுகுமுறை பற்றிய புதிய விழிப்புணர்ச்சியையும் உருவாக்கும்.

  ஆகவே பல்கலைக்கழகங்களில் உள்வாரி நியம உறுதிப்படுத்தல் நடவடிக்கைகளை வலுவாக்கும் நோக்கத்துடன் உள்வாரி நியம உறுதிப்படுத்தல் கைநூல் தயாரிக்கப்பட்டு தற்பொழுது நியம உறுதிப்படுத்தல் மற்றும் மதிப்பேற்றல் சபையின் (QACC) இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

- இலங்கையிலுள்ள சகல உயர் கல்வி (அரச, தனியார்) நிறுவனங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் மதிபேற்றல் செய்வது சபையின் பிரதான பொறுப்புக்களில் ஒன்றாகும். உயர் கல்வியினை மதிப்பேற்றச் செய்வது சுய, ஒப்பான மதிப்பிடலையும், கல்விசார் நியமத்தை மேம்படுத்தலையும் அடிப்படையாகக் கொண்டதொரு கல்லூரியியல் செயல்முறையாகும். இந்நோக்கத்திற்காக, நியம உறுதிப்படுத்தல் மற்றும் மதிப்பேற்றல் சபையினால் (QACC) னால் கீழே குறிப்பிடப்பட்ட பாட ஒழுங்குகள் இனம் காணப்பட்டுள்ளன.

  1. விவசாயமும், விலங்கியல் விஞ்ஞானமும் கால்நடையும்
  2. வணிகமும், முகாமைத்துவமும்
  3. கலைகள், மானிடவியல், சமூக விஞ்ஞானங்கள், கல்வி, சட்டம், நுண்கலைகள்
  4. பொறியியல், கட்டக்கலை, தகவல் தொழில்நுட்பம், ஜியோமடிக்ஸ்
  5. மருத்துவம், பல் விஞ்ஞானங்களுடன் தொடர்பான சுகாதார விஞ்ஞானங்கள்
  6. விஞ்ஞானமும், மீன்பிடித்தலும்

  மேலும் நியம உறுதிப்படுத்தல் மற்றும் மதிப்பேற்றல் சபை, மதிப்பேற்றல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பிரமாணங்களை இனம் கண்டிருப்பதுடன், ஆய்விலுள்ள இவ் வருடத்தில் மதிப்பேற்றல் செயல்முறை பற்றியும், மதிப்பேற்றல் கைநூலைத் தயாரிப்பதற்குமான 03 செயலமர்வுகளை நடாத்தப்பட்டன.

- எதிர்பார்க்கப்பட்ட வெளிவாரி நியமத்தை உறுதிப்படுத்தலின் வெளியீடுகளை அடைவதற்கான முறையாக இணையத்தளமொன்றை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையொன்று அபிவிருத்தி செய்யப்பட்டது.

  இம் முறைமை வெளிவாரி நியம உறுதிப்படுத்தலின் சிநேகபூர்வமான, தெளிவான மேம்படுத்திய தகவல் பாவனையை வழங்குகின்றது. அத்துடன் அது தொடரறா படிவம்கள்/கேள்விக்கொத்துக்களுடாக மீள்பார்வை பொறிமுறையொன்றினையும் வழங்குகின்றது. தகவலை இலகுவாகச் சேருதல் இலங்கையில் உயர்கல்வித் துறையினை மேம்படுத்துவதற்குரிய தீர்மானத்தை மேற்கொள்ளவதற்கான அடிப்படையினை அதிகாரங்களுக்கு வழங்குகின்றது. இலகுவாக சேருவதற்காக இம் முறைமை நியம உறுதிப்படுத்தல் மற்றும் மதிப்பேற்றல் சபையின் பிரதான இணையத்தளத்துடன் (www.qaacouncil.lk) தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

  சக்திவாய்ந்த தன்மையினைப் பேணுவதற்காக உயர் வலுவுள்ள ஆதரவுமுள்ளது. வெளிவாரி நியம மதிப்பிடுதலுக்காக இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பு மற்றும் ஆய்வு முறையை நடைமுறைப்படுத்துவது, உயர் கல்வித்துறையில் நியமத்தை உறுதிப்படுத்தலின் முக்கியமானதொரு மைல்கல்லாகவிருக்கும்.

**2012ன் போது பல்கலைக்கழகளின் நியம உறுதிப்படுத்தல் நடவடிக்கைகளின் சுருக்கம்**

| நடவடிக்கை | 2012ம் வருடத்தில் | மொத்தம் |
|---|---|---|
| **1. வெளிவாரி நியம மதிப்பிடல்கள் (EQAs)** | | |
| a. பாடம்/நிகழ்ச்சித்திட்ட மீள்பார்வை (SR/PR) | **07** | **309** |
| **2. நிகழ்ச்சித்திட்ட மதிப்பேற்றல்** | | |
| **விவசாய, முகாமைத்துவ, கலைகள் பாட நெறிகளுக்கான மதிப்பேற்றல் கைநூலைத் தயாரிப்பதற்கான தேசிய செயலமர்வுகள்** | **03** | **05** |
| **3. பாட மதிப்பு நிர்ணயப் புள்ளிக்கான அறிக்கைகள் (SBS)** | **03** | **41** |
| **4. விழுப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள்** | **03** | **258** |
| **5. செயலமர்வுகள்** | **17** | **274** |
| **6. பிரசுரங்கள்** | | |
| a. பீட தொகுப்பு அறிக்கைகள் | **01** | **60** |
| b. உள்வாரி நியம உறுதிப்படுத்தல் கைநூல் | **தயாரிக்கப்பட்டது** | **வேளியிடப்பட்டது (QAAC இணையத்தளம்)** |
| c. ஆராய்ச்சி பத்திரிகைகள் | **02** | **09** |
| d. வெளிவாரி நியம உறுதிப்படுத்தலுக்கான பயிற்சி பொதி தயாரித்தல் | **தயாரிக்கப்பட்டது** | **வெளியிடப்பட்டது (APQN இணையத்தளம்)** |
| **7. பயிற்சியளிக்கப்பட்ட மீள்பார்வையாளர்கள்** | **04** | **621** |
| **8.** பல்கலைக்கழகங்களில் வெளிவாரி நியம மதிப்பிடுதலுக்காக இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பு மற்றும் ஆய்வு முறை | விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது | |
| **9. APQN மதிப்பேற்றல்** | | |
| **10.சர்வதேச மீள்பார்வைகள்** | **02** | **02** |

## 12. மாணவர் தொடர்பான விடயங்கள்

### பல்கலைக்கழக மாணவர் சாஸனம்

அரச பல்கலைக்கழகங்களுக்கு பதிவு செய்யப்படும் மாணவர்களுக்கு வழிகாட்டும் பொருட்டும், பல்கலைக்கழகத்திற்கும் அதன் மாணவர்களிடையேயுள்ள தொடர்பு நிலைமைகளை விளக்கும் ஆவணமாகவும் “பல்கலைக்கழக மாணவர் சாஸனமொன்றினை” பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தயாரித்துள்ளது. அரச பல்கலைக்கழகங்களின் சுமூகமான செயலாற்றலுக்கு அதன் சகல பங்காளர்கிடமிருந்தும் எதிர்பார்க்கப்படும் பொறுப்புணர்வை இச் சாஸனம் சுட்டிக்காட்டுவதால், அது கல்விசார், நிர்வாக மற்றும் ஆதவுப் ஆளணியினர், பொதுமக்கள் ஆகியோருக்கு வழிகாட்டியாகவும் திகழ்கின்றது. மேலும் இப் பல்கலைக்கழக மாணவர் சாஸனம் அரச பல்கலைக்கழகங்கள் தங்களுக்கு கடமைப்பாடாக ஒப்படைக்கப்பட்ட பங்கினை ஆற்றி, நிறுவனத்தின் மூலாதார பெறுமதியினையும், கோட்பாடுகளையும் பாதுகாத்து

தக்கவைப்பதற்கு ஒத்துளைத்து பங்களிப்பதற்காக மாணவர்களை வினயமாக ஊந்துகின்றது.

## 13. பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவி

### 13.1 அறிமுகம்

பல்கலைக்கழக மாணவர்களுக்கு 03 பிரதான திட்டங்களின் கீழ் நிதி உதவியளிக்கப்படுகின்றன. அவையாவன:

மஹாப்பொல புலமைப்பரிசில் திட்டம்
கல்வி நிதியுதவித் திட்டம்
அறக்கொடைகள் புலமைப்பரிசில் திட்டம்

இம் மூன்று திட்டங்களில், மஹாப்பொல புலமைப் பரிசில்களுக்கும், அறக்கொடைகள் புலமைப் பரிசில்களுக்குமான மாணவர்கள் வருடாந்தம், ப.க.மா. ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்படும் அதேவேளை, பல்கலைக்கழக கல்வி நிதியுதவிக்கான தெரிவுகள், பொறுப்பான பல்கலைக்கழகள்/ உ.க. நிறுவனங்களினால் கையாளப்படுகின்றன.

(1) **மஹாப்பொல புலமைப் பரிசில்**

மஹாப்பொல புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ், மஹாப்பொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் இரு வகையான புலமைப் பரிசில்களை – அதாவது மஹாப்பொல திறமை புலமைப் பரிசில், மஹாப்பொல உயர் கல்வி சாதாரண புலமைப் பரிசில் ஆகியவற்றை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் இணைந்து வழங்கப்படுகின்றது.

(2) **கல்வி நிதியுதவி, மஹாப்பொல புலமைப் பரிசில் கொடுப்பனவு**

2012ம் வருடத்தின் போது, பின்வரும் கல்வி நிதியுதவி, மஹாப்பொல புலமைப் பரிசில்கள் - திறைசேரி பங்களிப்பு (TC) அறக்கொடைகளுடனும், புலமைப் பரிசில்களுடனும் - வழங்கப்பட்டன

| மாணவர்களுக்குரிய நிதியுதவிகளின் வகைகள் | மாணவர்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட மொத்த தொகை ரூபா. (மில்) |
|---|---|---|
| மஹாப்பொல புலமைப் பரிசில் | 33,089 | 101.46 |
| கல்வி நிதியுதவி | 23,446 | 283.4 |
| அறக்கொடைகள் புலமைப்பரிசில் | 35 | 1.4 |

**(3) அறக்கொடைகள் புலமைப் பரிசில்**

மேற்குறிப்பிட்ட புலமைப் பரிசில்களுக்கு மேலாக, கருத்திலெடுக்கப்டும் வருடத்தில் பின்வரும் புலமைப் பரிசில்கள் திட்டங்களும் கூட நடைமுறையிலிருந்தன.

(a) **மிட்சுபிஷி கோப்பரேசன் சர்வதேச புலமைப் பரிசில்**

மிட்சுபிஷி கோப்பரேசனால் நிதியளிக்கப்படும் புலமைப் பரிசில் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று ப.மா.ஆ. குழுவிற்கும் மிட்சுபிஷி கோப்பரேசனக்குமிடையே கைசாத்திடப்பட்டது.

இப் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ், கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தினதும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தினதும் முகாமைத்துவ கற்கை நெறிகளைக் கற்க தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு முப்பது (30) புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இப் புலமைப்பரிசிலின் வருடாந்த பெறுமதி ரூபா. 48, 000/= (12 மாதத்தவணைகளில் ரூபா. 4,000 வீதம் செலுத்தக்கூடியது) ஆகும். இது ஒரு வருட காலத்தைக் கொண்டிருப்பதுடன் மற்றொரு வருடத்திற்கு நீடிக்ககூடியதுமாகும்.

**(b) பொலீஸ் சி.டவ்ளியு.சி நன்மைகள் திட்டம்**

பொலீஸ் சி.டவ்ளியு.சி நன்மைகள் திட்டத்தினால் நிதியளிக்கப்படும் இப் புலமைப் பரிசில்களின் கீழ், பொறியியல், மருத்துவம், விவசாயத் துறைகளில் மொரட்டுவைப் பல்கலைக்கழகம், பேராதனிய பல்கலைக்கழகம், வையம்ப பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அனுமதி பெற்ற மாணவர்களுக்கு 2010/2011 கல்வியாண்டிற்கு மூன்று (03) புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

ரூபா. 20, 000/= வை வருடாந்த பெறுமதியாகக் கொண்ட இப் புலமைப் பரிசில் பத்து (10) மாதத் தவணைகளில் ரூபா. 2000/= வீதம் கற்கை நெறியின் முழுக்காலத்திற்கும் வழங்கப்படும்.

**(c) ஹிரான் திலகரட்ன ஆராய்ச்சி விருதுகள்**

தலைசிறந்த பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சி – 2012 க்கான ஹிரான் திலகரட்ன ஆராய்ச்சி விருது வழங்கும் வைபவம் 2012 மார்ச் மாதம் 27ம் திகதியன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில், ப.மா. ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயகாவின் தலைமையில், நங்கொடையாளியான திரு. ஏர்ட்லி திலகரட்னவின் பங்குபற்றலுடன் இடம் பெற்றது.

பல்கலைகழக கல்விசார் ஆளணியினர், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்களின் ஆளணியினர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சிகளை கௌரவிப்பதே இவ் விருதுகளின் நோக்காகும்.

இவ் வைபவத்தில், 2009 லிருந்து 2011 வரையிலான வருட காலப்பகுதியில் இயற்கை விஞ்ஞானங்கள், மருத்துவம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட 03 ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒவ்வொன்றும் ரூபா. 150,000 தொகை கொண்ட மானியங்கள் வழங்கப்பட்டன.

(4) **சுனாமியால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம்**

உள்நாட்டு, வெளிநாட்டு நலன் விரும்பிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நன்கொடைகளைக் கொண்டு ப.க.மா. ஆணைக்குழுவினால் 2005ல் நிறுவப்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான சுனாமி புலமைப் பரிசில் திட்டத்தின்

கீழ், சுனாமியால் பாதிக்கப்பட்ட பட்டடதாரி மாணவர்களுக்கு 2012ம் வருடப் பகுதியில் ரூபா. 1,398,000/- வழங்கப்பட்டது.

### 13.2 புலமைப் பரிசில் வழங்களை ஒருங்கிணைத்தல்

- **பல்கலைக்கழகத்தில் கற்க நுளைவோருக்கான கொமர்சியல் வங்கியின் புலமைப் பரிசில் திட்டம்**

  கொமர்சியல் வங்கியின் புலமைப் பரிசில் திட்டம் இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களையும் உள்ளடக்கிய மருத்துவ, முகாமைத்துவ பீடங்களில் கற்பதற்குரிய பல்கலைக்கழக நுளைவோருக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப் புலமைப் பரிசிலின் பெறுமதி வருடத்திற்கு ரூபா. 25,000/- ஆகவிருப்பதுடன் 10 மாதாந்த தவணைகளில் வழங்கப்படுவதுடன், இதன் முழு தவணைகளும் சம்பந்தப்பட்ட கற்கைநெறியின் குறிப்பிட்ட காலத்தைப் பொறுத்திருக்கும்.

  2009/2010 கல்வியாண்டிலிருந்து 25 மாணவர்களும், 2010/2011 கல்வியாண்டிலிருந்து சம எண்ணிக்கையான மாணவர்களும் முறையே 2009, 2010 உ.பொ.க.த. பரீட்சைகளின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட வருடங்களில் புலமைப் பரிசிலுக்காக தெரிவு செய்யப்பட்டார்கள.

- **டயலொக் சிறப்பு புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டம்**

  டயலொக் சிறப்பு புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டம் க.பொ.த. (உயர்தர மட்டம்) பரீட்சையின் 27 உயர் சாதனையாளருக்கும், இலங்கை பல்கலைக்கழகங்ளின் பொறியியல் பீடங்களுக்கு நுளைய தகுதி பெறுவோருக்கும் வருடாந்தம் விஸ்தரிக்கப்படுகின்றது.

  சிறிலங்கா டயலொக் ரெலிகொம் பீ.எல.சி யினால் முழுமையாக நிதியளிக்கப்பட்ட, 2009, 2010ல் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர மட்டம்) பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட 54 புலமைப் பரிசில் வழங்குவதற்கான வைபவம், 2012 ஜனவரி 26ம் திகதியன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் (UGC) ஏற்பாடு செய்யப்பட்டது.

  இப் புலமைப் பரிசிலின் பெறுமதி மாதமொன்றிக்கு ரூபா. 4000/- வாகவிருப்பதுடன், திருப்திகரமான கல்வி நடவடிக்கைகளின் செயற்றினையும், நல்நடத்தையையும் பொறுத்து பாடநெறியின் காலத்திற்கு வழங்கப்படும்.

## 14. நிதி முகாமைத்துவத்தை மேம்படுத்தல்

கணக்காய்வு நாயகத்தினாலும், பாராளுமன்ற பொது முயற்சிகள் குழுவினாலும் [COPE] விதந்துரைக்கப்பட்ட அவதானங்களைக் கருத்திலெடுத்து, உயர்கல்வி நிறுவனங்களின் நிதிகளை முகாமை செய்வதை கிரமாக மீள்பார்வை செய்வதற்காக ப.மா.ஆணைக்குழுவினால் கணக்காய்வு நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பு குழுவொன்று அமைக்கப்பட்டது. இக் குழு, அணி அமைச்சின் செயலாளர் தலைமையில் கிரமமான அடிப்படையில் கூடி, நிதிப் பிரமாணங்களைப் பேணுவதற்காக திறைசேரியினால் அறிமுகம்செய்து வைக்கப்பட்ட நல்லாட்சி மற்றும் முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்வற்றுவதை உறுதி செய்யவதற்காக, உள்ளகக் கட்டுப்பாடு முறைமைகளிலும், செய்முறைகளிலுமுள்ள தவறுகள், பலவீனங்கள், குறைபாடுகள் ஆகியவற்றை இனம் காண்பதற்கு ப.க.மா.ஆணைக்குழுவிற்கும், உ.க. நிறுவனங்களுக்கும் உதவியது.

பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக ஆய்விலுள்ள வருடத்தில் இக் குழு, 29 தடவைகள் கூடியது. அவைகள் பின்வறுமாறு:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
கொழும்பு பல்கலைக்கழகம்
பேராதனைப் பல்கலைக்கழகம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
களனி பல்கலைக்கழகம்
மொரட்டுவை பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
றுஹுணு பல்கலைக்கழகம்
இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம்
இலங்கை ராஜரட்ட பல்கலைக்கழகம்
இலங்கை சப்ரகமுகவ பல்கலைக்கழகம்
இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கட்புல அரங்காட்டற் கலைகள் பல்கலைக்கழகம்
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம்
மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்
பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பின்பட்டப்படிப்பு நிறுவகம்
தொல்லியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம்
முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்
விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம்
மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
சுதேச மருத்துவ நிறுவகம்
கொழும்பு பல்கலைக்க கணனி கற்கை பாடசாலை
கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்
நூலகம் மற்றம் தகவல் விஞ்ஞானங்களுக்கான தேசிய நிறுவகம்
மொரட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப பட்டப்பின்படிப்பு நிறுவகம்
சுவாமி விபுலானந்ர் அழகியற் கற்கைகள் நிறுவனம்
ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகம்

## 15. கௌரவ உயர் கல்வி அமைச்சருடான முன்னேற்றம் தொடர்பான சந்திப்புக்கள்

கௌரவ உயர் கல்வி அமைச்சர் அவர்கள் கல்வியாளர்கள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஏனையயோரை உள்ளடக்கிய பல்கலைக்கழக சமூகத்துடன் பல்கலைக்கழக கல்வி முறையினை சீராக்கி செயல்படுத்தவும், முன்னேற்ற நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொருட்டும் இவ் வருடத்தில் பின்வரும் பல சந்திப்புகளை மேற்கொண்டார்.

நடத்தப்பட்ட சந்திப்புக்கள்:

(1) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை கலை இளம் பட்டமாணிகளுக்கு அறிமுகம் செய்வதற்கான சாத்தியக்கூறுகளைத் தேடுவதற்காக கொழும்பு கலதாரி ஹொட்டலில் 26.01.2012லும், 20.03.2012லும் ஆணைக்குழு உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கலைகள், மானிடவியல் பீடாதிபதிகள், கைத்தொழில் மற்றும் கல்விசார் நிபுணர்களுடன்

(2) 2012ன் நடுத்தர, நீண்டகால அபிவிருத்திற்கான யுக்திகளையும், மாணவர்களின் பிரச்சினைகளையும் ஆராய்வதற்காக 14.02.2012ல் உப-வேந்தர்களுடனும், ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும்.

(3) 2012 – 2015ற்கான யுக்தி திட்டம், 2012ற்கான செயற் திட்டம் ஆகியவற்றை ஆராய்வதற்காக 30.04.2012ல் கொழும்பு பல்கலைக்கழகம், பேராதனிய பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகம், மொரட்டுவ பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உப-வேந்தர்களுடனும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும்

(4) 22.06.2012ல் பல்கலைக்கழகங்களின் நடைமுறை விவகாரங்களையிட்டு கலந்துரையாட சகல உப-வேந்தர்களுடனும்

(5) ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை ராஜரட்ட பல்கலைக்கழகம், இலங்கை சப்ரகமுகவ பல்கலைக்கழகம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், கட்புல அரங்காட்டற் கலைகள பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உப-வேந்தர்களுடன் யுக்தி திட்டம், செயற் திட்டம் பற்றி 25.06.2012ல் கலந்துரையாடுவதற்காக

(6) கவிதா ஆற்றல் பரிசளிப்பு வைபவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் 30.07.2012ல் கொழும்பு கலதாரி ஹொட்டலில் கலந்துரையாடல்

(7) 2012ம் வருட வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதையிட்டு திறைசேரி அதிகாரிகளுடன் இடம் பெறவிருக்கும் வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னரான கலந்துரையாடலைப் பற்றி ஆராய 20.08.2012லும், உப-வேந்தர்களுடனும், திறைசேரி அதிகாரிகளுடனும் 06.09.2012ல் பின்தொடர் கூட்டமும்

## 16. தேசிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள்

- 2004/05 (மீள் நடத்தப்பட்ட) மருத்துவப்பட்ட (MBBS) இறுதி பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்ட MBBS திறமை வரிசை பட்டியல்கள் தொகுக்கப்படடு சுகாதார அமைச்சுக் உள்ளக பயிற்சிக்கு இடமளிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

- 2005/06 MBBS (பிரதான) பரீட்சை – ரஜரட்ட மருத்துவ பீடம் நீங்கலாக – தொடர்பான MBBS பட்டடதாரிகளுக்கான தற்காலிகமான திறமை வரிசைப் பட்டடியல் தொகக்கப்பட்டு உள்ள பயிற்சிக்காக சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- மத்திய வங்கி, குடிசன தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், தொழில் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரசுங்களில் உயர் கல்வி பிரிவுகளின் தரவுகளைத் தொகுப்பதற்காக முகாமைத்துவ தகவள் முறைமை (MIS) பிரிவு உதவியது.
- யுனஸ்கோவின் புள்ளிவிபர நிறுவனத்திற்குத் தேவையான பல்கலைக்கழக கல்விக்குரிய தகவல்களையும் முகாமைத்துவ தகவள் முறைமை (MIS) பிரிவு சமர்ப்பித்தது.

## 17. சட்ட விவகாரங்கள்

### 17.1 புதிய சட்டம்

ஆய்விலுள்ள வருடத்தில், ஆணைக்குழுவின் சட்டப் பிரிவினால் 5 கட்டளைகளையும் (1 இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு தகுதிவாயந்த அதிகாரியை நியமிப்பதற்கும், 02 சில நிறுவனங்களை மூடுவதற்கும், 02 யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பொறியியல் பீடங்களை நிறுவுவதற்கும்) 01 கட்டளைச் சட்டத்தையும் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(1) **வருடத்தின் போது விடுக்கப்பட்ட கட்டளைகள்:**

(a) 1978ம் பல்கலைக்கழகச் சட்ட இல. 16ன் 20(4) பிரிவின் கீழ் இலங்கை கிழக்கு பல்கலைக்கழக சபைக்குப் பதிலாக தகுதி வாய்ந்த அதிகாரியாக திரு. நிமல் ரன்ஜித் அர்த்தநாக்காவை நியமித்த கட்டளையை அழித்து, அவரை குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் உப-வேந்தருக்குப் பதிலாக தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிப்பதற்கான கட்டளை தயாரிக்கப்பட்டு, 2012 ஆகஸ்ட் 23ம் திகதியுடைய 1742/5ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

(b) 2012 ஆகஸ்ட் 21ம் திகதியன்று வெளியிடப்பட்ட 1772/5 விசேட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1978ம் பல்கலைக்கழகச் சட்ட இல. 16ன் 20 (4) (a) பிரிவின் கீழ் கௌரவ உயர்கல்வி அமைச்சரினால் விடுக்கப்பட்ட கட்டளையில் இணைக்கப்படுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிறுவனங்களை, அவைகள் இயல்பு நிலைக்கு திரும்பும்வரை மூடுவதற்கான கட்டளை.

(c) 2012 செப்டம்பர் 5ம் திகதியுடைன 1774/8 ம் இலக்க விசேட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1978ம் பல்கலைக்கழ சட்டம் 16ன் உப பிரிவு இல: 24(4)ன் கீழ் குறிபிட்ட கௌரவ உயர் கல்வி அமைச்சரினால் செய்யப்பட்ட கட்டளையை குறிப்பிட்ட நிறுவனங்கள் இயல்பு நிலைக்கு மீண்டுள்ளதால் அக்கட்டளையை அழிப்பதற்கான கட்டளை.

(d) 2012 டிசெம்பர் 05ம் திகதியுடைய விசேட அரசாங்க வர்த்தமானி இல. 1787/27 ல் பிரசுரிக்கப்பட்ட 1978 ன் பல்கலைக்கழக சட்டம் இல. 16ன் பிரிவு 27(1) னால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலும் பொறியியல் பீடங்களை நிறுவுவதற்கான இரண்டு கட்டளைகள் விடுவிக்கப்பட்டன.

**(2) இவ் வருடத்தின் போது பின்வரும் கட்டளைச் சட்டம் செய்யப்பட்டது.**

2012 ஏப்பிரல் 25ம் திகதி விசேட அரசாங்க வர்த்தமானி இல. 1755/33 ல் பிரசுரிக்கப்பட்ட, 1978ன் பல்கலைக்கழகங்கள் சட்டம் இல. 16 ன் பிரிவு 18 உடன் வாசிக்கப்படும் 1966ன் விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவக கட்டளைச் சட்டம் இல. 1ன் பிரிவு 24 க்கு திருத்தம் செய்யப்பட்டது.

### 17.2 நீதிமன்ற வழக்குகள்

இவ் வருடத்தின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு எதிராக சட்ட நீதிமன்றங்களிலும், தீர்ப்புச் சபைகளிலும் பதிவு செய்யப்பட்ட முழு எண்ணிக்கையான 45 வழக்குகளை ஆணைப்பிரிவின் சட்டப் பிரிவு கையாண்டது. அவைகள் பின்வருமாறு.

உயர் நீதிமன்றம் – 22 வழக்குகள்
மேன் முறையீட்ட நீதிமன்றம் – 07 வழக்குகள
மனித உரிமைகள் ஆணைக்குழு – 03 வழக்குகள்
தொழில் திணைக்கள விசாரணைகள் – 01 வழக்கு
மாவட்ட நீதிமன்றம் – 01 வழக்கு
மேல் நீதிமன்றம் – 02 வழக்குகள
தொழில் தீர்ப்புச்சபை – 01 வழக்கு
பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபை – 08 வழக்குகள்

## 18. மத்திய உள்ளக கணக்காய்வு

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினதும், உயர் கல்வி நிறுவனங்களினதும் கணக்காய்வு ஒப்படைகள், விசாரணைகள் ஆகியன மத்திய உள்ள கணக்காய்வு பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருப்பதுடன், அது சென்ற வருடங்களைப் போன்று தனது நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்கின்றது. இது உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் செய்முறைகளின் ஆற்றலளவினையும், சுற்று நிருப அறிவுறுத்தல்கள், பல்கலைக்கழக சட்டம் மற்றும் ஏனைய தொடர்பான விதி, ஒழுங்குவிதிகளைப் பின்பற்றலை நிச்சயப்படுத்தலையும் மீள்பார்வை செய்கின்றது. கண்காணிப்பு செயல்முறை, எவையேனும் புதிய அல்லது மாற்றுக் கொள்கைகளை பிரேரித்தல் ஆகியன பல்கலைக்கழக ஆணைக்குழுவின் கணக்காய்வுக் குழுக்கூடாக செய்யப்படுகின்றது.

சகல தவறுகள், பலவீனங்கள், குறைபாடுகள் போன்றன உரிய அதிகாரிகங்களுக்கு, மேம்பாடுகளுக்கான ஆலோசனைகளுடன் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

(1) இவ் வருடத்தின் போது, பின்வரும் பல்கலைக்கழகளிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் சாதாரண கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களுடன், சில குறிப்பிட்ட பகுதிகளில் விசேட விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
சுவாமி விபுலானந்ர் அழகியற் கற்கைள் நிறுவனம
மானிடவியல் மற்றும் சமூகசேவைகளில் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம்

(2) பாராளுமன்றத்தின் பொது நிறுவனங்கள் குழுவுடன் (COPE) 29 பல்கலைகங்கள்/உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பான கூட்டங்கள் சம்பந்தமான விடயங்களை மத்திய உள்ளக கணக்காய்வு பிரிவு ஒருங்கிணைத்ததுடன், பொது முயற்சி குழு (COPE) வினால் வேண்டப்பட்ட தகவல்களையும் சமர்ப்பித்தது.

(3) ஆய்விலுள்ள வருடத்தில், கணக்காய்வுக் குழு 30.03.2012, 07.12.2012 ஆகிய மூன்று தினங்களில் கூடியது.

## 19. பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டுச் சபை (USAB)

ஆயிவிலுள்ள இவ் வருடத்தில், ப.சே.மே.மு சபை 48 அமர்வுகளை நடத்தியது. 2012ல் ப.மே.மு சபையில் பதினெட்டு (18) மேன்முறையீடுகள் பதிவாகின. பத்தொன்பது (19) தொடர்பான கட்டளைகள் வழங்கப்பட்டுதுடன், அவைகளில் பதினேழு (17) தள்ளுபடி செய்யப்பட்டதுடன், இரண்டு (02) அனுமதிக்கப்பட்டன. ஆரம்ப கட்டளை விடுக்கப்படவில்லை. ஒரு விடயம் மட்டும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இருபத்தியிரண்டு (22) மேன்முறையீடுகள் 2012 வருட இறுதியிலும் நிலுவையிலுள்ளது.

## 20. பிரசுரங்களும், ஆராய்ச்சி கற்கைகளும்

(1) 2012 ஆகஸ்டில் “இலங்கை பல்கலைக்கழக புள்ளிவிபரங்கள் 2011” - இத் தொடரின் பத்தாவது தொகுதி- பிரசுரிக்கப்பட்டது.

(2) உலகளாவிய சூழலில் தோன்றும் வாய்ப்புக்களுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுக்க இலங்கை பல்கலைக்கழகங்களை மீள்-உருவாக்கி மீள் நிலைப்படுத்துவதற்கான செயலமர்வுகளின் கூட்டறிக்கைகள் 2012 செப்டம்பரில் பிரசுரிக்கப்பட்டன.

(3) 2011ம் வருட நிதியாண்டிற்காக, பல்கலைக்கழகங்களின் கூறுகளின் மீண்டெழும் செலவு பகுப்பாய்வு செய்யப்பட்டு “இலங்கை பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர் கல்வி கூறின் மீண்டெழும் செலவின் பகுப்பாய்வு 2012ல் தயாரிக்கப்பட்டது.

(4) பல்கலைக்கழக முறைமையிலுள்ள அறிவு, தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு மூலவளங்கள் ஆகியவற்றை இனம் கண்டு மானிட, பௌதீக மூலவளங்களைக் கொண்ட பூரணமான தரவுத்தளத்தினை அபிவிருத்தி செய்வதற்கான அளவீடு 2012 ல் பூர்த்தி செய்யப்பட்டது. அவ்வாறான விபரங்களைப் பயன்படுத்தி பல்கலைக்கழக முறைமையினுள்ள நிறுவக அபிவிருத்தியை மேம்படுத்தலே இத் தரவுத்தளத்தின் நோக்கமாகும்.

(5) இலங்கையின் கல்விக்காக மாணவர் சேருதலின் மொத்த வீதத்தை பகுப்பாய்வு செய்யும் நோக்காக, இலங்கையின் உயர் கல்வியில் மாணவர் பங்காற்றும் மட்டத்தினை ஆராய்வதற்கான ஆய்வொன்று, மூன்றாம் நிலைக் நிகழ்ச்சி திட்டங்களை நடத்தும் அரசாங்க, அரச சார்புள்ள மற்றும் தனியார் உயர் கல்வி நிறுவகங்களை உள்ளடக்கி நடாத்தப்பட்டது.

(6) பிரேரிக்கப்பட்ட முறைமையின் முதலாவது தொடரறா தரவு சேகரிப்பு அலகு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் இணையத் தளத்தினூடாக அறிமுகம் செய்யப்பட்டது. (இவ் அலகு நிர்வாக ஆளணியினரின் தகவல்களை சேகரித்து, களஞ்சியப்படுத்தி, அறிக்கையிடுவதற்காக PHP மற்றும் MySql ஆகிய திறந்த மென்பொருள் மூலத்தைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்டது)

## 21. பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்

பல்கலைக்கழக ஆணைக்குழுவின் ஆயுள் காப்புறுதி ஆலோசகரினால் வழங்கப்பட்ட சிபாரிசிகளை ப.மா.ஆணைக்குழு அனுமதித்ததையடுத்து, அவைகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, 1978ன் பல்கலைக்கழக சட்டம் இல. 16ன் பிரிவு இல. 97ன் ஏற்பாடுகளின் கீழ் பல்கலைக்கழக ஓய்வூதியத் திட்டம், பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கான கொடுப்பனவுகளின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது. பல்கலைக்கழக பணியாளருக்கு பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு மேலதிகமாக, ஓய்வூதியத் திட்டத்தினை நிறுவ, அப்போதைய கௌரவ உயர் கல்வி அமைச்சர், காலஞ் சென்ற றிச்சார்ட் பதிரன அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரனைகள், 1999 மார்ச் 24ல் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டது.

அதன் பிரகாரம், ப.மா.ஆணைக்குழுவினால் 1999 யூன் 10ல் வெளியிடப்பட்ட ஆணைக்குழு சுற்று நிருப இல. 747 க்கமைய, பல்கலைக்கழக ஓய்வூதியத் திட்டம் 1999 செப்டம்பர் 1 லிருந்து நிறுவப்பட்டது.

**உறுப்புரிமை**

- 1999 செப்டம்பர் 1ம் திகதியன்று சேவையிலிருந்த சகல நிரந்தர ஊழியர்களும், இவ் ஓய்வூதியத் திட்டத்தின் உறுப்பினராகும் வாயப்பை வழங்கிய அதே வேளை, 1999 செப்டம்பர் 1ம் திகதியிலிருந்து பல்கலைக்கழகச் சேவையில் இணையும் புதிய ஊழியர்களுக்கு இவ் உறுப்புரிமை கட்டாயமாக்கப்பட்டது.

- 1999 செப்டம்பர் 01ல் சேவையாற்றும் ஊழியர்கள் உறுப்பினராவதற்கு விருப்பைத் தெரிவிக்கையில், அவர்களின் சென்றகால பொறுப்பை எதிர்கொள்வதற்காக அவர்களின் வரவிலுள்ள சேமலாப நிதியத்தின் மொத்த மீதியின் 40% மாற்றம் செய்யப்பட்டது. இவ்விரு பகுதியாளர்களின் விடயத்தில், சேமலாப நிதியத்திற்கு ஊழியரினால் பங்களிக்கப்பட்ட வருமானத்தின் 15% த்தில் 8% வீத வருமானம் எதிர்கால சேவைப் பொறுப்புக்களுக்காக ஓய்வூதிய நிதியத்தில் கணக்கிலிடப்பட்டது. மீதி 7% வருமானம் சேமலாப நிதியத்தில் கணக்கிலிடப்பட்டது.

**நன்மைகள்**

- இந் நிதியத்தின் உறுப்பினர்கள் 20 வருடங்கள் அல்லது அதற்கதிகமாக ஓய்வு பெறும் வயதுவரை (கல்விசார் ஆளணியினர் 65 வருடங்களுக்கும், கல்விசாரா ஆளணியினர் 55 அல்லது 60 வருடங்கள் அல்லது பதவி நீடிப்பில் இடைநடு வரை) சேவையாற்றி ஓய்வு பெற்றால், வாழ்நாளிற்காக ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.

- ஓய்வூதியத் தொகை, ஒவ்வொரு வருட சேவைக்கும், அவ் வருடத்தின் இறுதி மாதத்தில் பெற்ற சம்பளத்தின் நூற்று வீதத்ததைக் கணக்கிட்டு கணிக்கப்படுகின்றது. அவ்வாறு பிரயோகிக்கப்படும் வீதங்கள், இளைப்பாறும் வயதாகிய முறையே 55, 60, 65 வருடங்களுக்கு 1.0%, 1.2%, 1.4% ஆகவிருக்கும். கல்விசாரா ஊழியர்கள் 55 வயதில் ஓய்வு பெறலாமாயினும், 60 வருடங்கள் வரை சேவை நீடிப்பை பெறவும், அல்லது நிடைநடுவில் ஓய்வு பெறவும் முடியும். அவர்களுக்கும் இவ் ஓய்வூதியம் விகிதாசாராப்படி வழங்கப்படும்.

- ஓய்வூதிய பெறுநர் மரணிக்கும் வேளை, ஓய்வூதியத்தின் 50% வாழ்க்கைத் துணைக்கு வழங்கப்படுவதுடன், மீதியான 50% சமமாகப் பிரிக்கப்பட்டு பிள்ளைகள் 18 வருட வயதை அடையும் வரை வழங்கப்படும்.

- 20 வருடங்கள் சேவைப் பூர்த்தி செய்யாது ஓய்வு பெறும் ஊழியர் ஓய்வு பெறும் வேளையில், அவரின் வரவிலுள்ள தொகையும், வட்டியும் மீளளிக்கப்படும்.

- திருமணம் முடியாத பணியாளர் சேவையாற்றுகையில் மரணிக்கும் வேளை, அல்லது 20 வருடகாலச் சேவையைப் பூர்த்தி செய்யாது பணியாளர் மரணிக்கும வேளை அவர்களின் வரவிலுள்ள தொகையும், வட்டியும் அவர்களின் பின்னுரித்தாளருக்கு வழங்கப்படும்.

**ஆளுகையும், முகாமைத்துவமும்**

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் ஆழுகையையும், முகாமைத்தவம் செய்தலையும் விரிவாக்கவும், வலுப்படுத்தவும் பிரேரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் ஒழுங்குபடுத்தல், நிருவாகம், முகாமைத்துவம் ஆகியவற்றிக்கான கட்டளைச் சட்டத்தை வரைவதற்காக குழுவொன்றினை நியமிப்பதற்கும், பல்கலைக்கழக ஓய்வூதியத்தின் நடவடிக்கைகளைக் காலத்திற்குக் காலம் மீள்பார்வை செய்வதற்கும் ஆலோசனை.்.கண்காணிப்பு சபையொன்றினை நியமிப்பதற்கும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. நிதியத்தின் வருடாந்த கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வு செய்வதற்காக கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முதலீடுகளும் அரசாங்கத்தின் விதிகள், ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப இடப்பட்டுள்ளன.

**நிதி கூற்றுக்கள்**
**ஓய்வு நிதியம் - பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு**

| | | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| 1 | உறுப்புரிமை | | | | | |
| | செயற்படு உறுப்பனர்கள் | 6,073 | 6,883 | 7,282 | 7,588 | 8,167 |
| | ஏனைய செயற்படா உறுப்பனர்கள் | 968 | 1,080 | 1,363 | 1,503 | 1,778 |
| | உறுப்பனர்கள் எண்ணிக்கை | 7,041 | 7,963 | 8,645 | 9,091 | 9,945 |
| 2 | ஓய்வூதியம் பெறும் உறுப்பனர்களின் எண்ணிக்கை | 67 | 82 | 89 | 113 | 121 |
| 3 | நிதியத்தின் மீதி(ரூபா. மி.) | | | | | |
| | பங்களிப்போரின் நிதி | 1052 | 1330 | 1633 | 1958 | 2432 |
| | ஓய்வு பெறுவோரின் நிதியும், ஒதுக்கமும் | 117 | 164 | 201 | 278 | 299 |
| | | 1169 | 1494 | 1833 | 2236 | 2731 |
| 4 | மொத்த முதலீடுகள் (ரூபா. மி.) | 1117 | 1392 | 1679 | 2000 | 2454 |
| 5 | மொத்த முதலீட்டு வருமானம் (ரூபா. மி.) | 146 | 208 | 213 | 224 | 236 |
| 6 | வருமான வரி (ரூபா. மி.) | 15 | 21 | 21 | 22 | 20 |
| 7 | முதலீட்டின் மீள்திருப்பம் (மூ) | 13% | 15% | 13% | 11% | 10% |
| 8 | உறுப்பினர்களுக்கு வெளிப்படுத்திய வட்டி | 12% | 13% | 11.5% | 8% | 9% |
| 9 | ஓய்வூதியக் கொடுப்பனவுகள் (ரூபா. மி.) | 8 | 12 | 12 | 17 | 17 |

நிதியத்தின் வளர்ச்சி




ஓய்வூதியக் கொடுப்பனவுகள்




முதலீட்டு வருமானம்




வருமான பகுப்பாய்வு - 2012




## 22. பல்கலைக்கழக சேமலாப நிதியம்

1978 ஆண்டின் பல்கலைக்கழக சட்ட இல. 16 ன் 89 – 96ம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பல்கலைக்கழக சேமலாப நிதியம், பல்கலைக்கழக முறைமையின் கீழுள்ள பணியாளர்கள் ஓய்வு பெறும் காலத்தில், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் திட்டமாக நிறுவப்பட்டது. ஓய்வு பெறும் போது அல்லது சேவையிலிருந்து நீங்கும் போது சிறந்த வருமானத்தைப் பெறுவதற்காக இந் நிதியத்தை விவேகமாக முகாமை செய்வதே பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் நோக்காகும்.

சேமலாப நிதியத்தின் உறுப்பினர்கள் தாங்கள் உழைக்கும் ஊதியத்தில் 10மூ தினை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு வேளை செலுத்தும் வேலைகொள்ளுனர் ஊழியரின் உழைக்கும் ஊதியதின் 15மூதை நிதியத்திற்கு செலுத்துவர்.

**நன்மைகள்**

- ஓய்வு பெறும் வேளையில், உறுப்பினரின் கணக்கில் வரவிலுள்ள மீதி ஓய்வூதிய நன்மையாகச் செலுத்தப்படும்.
- அரசாங்க அதிகாரிகளின் இடர்கால கடன்கள், வாகன கடன்கள், கணனிக்கான கடன்கள் ஆகியவற்றிக்குப் பிணையாக நிதியத்தின் மீதியை பயன்படுத்த முடியும்.
- பங்களிப்பவரின் மேநல நிதியத்திலுள்ள மீதியின் 65மூ க்கு மேற்படாத தொகையை கடனாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.
- கல்விசார் மற்றும் ஏனைய பணியாளர்கள் உயர்கல்விற்காக அல்லது பயணத்திற்காக அரசாங்க புலமைப் பரிசில்களைப் பெறும் போது உயர்கல்வி நிறுவனங்களின் முறிகளுக்காக நிதியத்திலுள்ள அவர்களின் மீதி நிதியினை பிணயாக வைக்கமுடியும்.

## நிதிக் கூற்றுக்கள்
## பல்கலைக்கழக சேமலாப நிதியம்
## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

| | | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | உறுப்புரிமை | | | | | | |
| | செயற்படு உறுப்பனர்கள் | 26,111 | 26,143 | 27,450 | 27,368 | 27,892 | 28,291 |
| | செயற்படா உறுப்பனர்கள் | 5,404 | 5,385 | 5,348 | 5,321 | 5,288 | 5,272 |
| 2. | மீள் திருப்பங்கள் | | | | | | |
| | மீள் திருப்பங்களின் எண்ணிக்கை | 2,071 | 2,544 | 2,302 | 2,847 | 2,663 | 2,349 |
| | மீள் திருப்பங்கள் பெறுமதி (ரூபா.மி) | 604.4 | 866.9 | 961.3 | 1,002.0 | 997.3 | 1,031.0 |
| 3. | நிதி மீதி (ரூபா.மி) | 12,433.2 | 13,761.3 | 15,515.1 | 16,906.6 | 18,502.0 | 20,832.0 |
| 4. | பொது ஒதுக்கம் (ரூபா. மி) | 156.5 | 162.5 | 49.4 | 74.8 | 123.7 | 391.0 |
| 5. | வட்டி வீதம் சமன்படு ஒதுக்கம் (IRER) (ரூபா. மி) | - | - | - | 136.9 | 281.6 | - |
| 6. | வருடத்தில் வழங்கிய கடன் (ரூபா.மி) | 1,139.9 | 695.1 | 640.1 | 708.8 | 858.8 | 784.0 |
| 7. | மொத்த முதலீடுகள் (ரூபா.மி) | 9,028.9 | 9,955.6 | 11,350.5 | 12,547.0 | 13,582.0 | 15,682.0 |
| 8. | முதலீட்டு வருமானம் (ரூபா.மி) | 978.3 | 1,189.0 | 1,627.4 | 1,553.8 | 1,560.6 | 1,762.0 |
| 9. | செலுத்திய வட்டி (ரூபா.மி) | 97.8 | 120.7 | 162.7 | 155.3 | 124.8 | 141.0 |
| 10. | முதலீட்டு வருமானம் | 10.84% | 12.12% | 14.34% | 12.38% | 11.50% | 11.3% |
| 11. | வெளியிடப்பட்ட வட்டி –ஆரம்ப மீதி | 10.5% | 12% | 15.5% | 10.5% | 9.5% | 11.0% |

**நிதியத்தின் வளர்ச்சி**




**மீள் செறுத்துகைகள்**




**முதலீட்டு வருமானம்**




**வருமானத்தின் மூலம்**



## 23. 2012ல் வெளியிடப்பட்ட ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களும், தாபன சுற்றுநிருபக் கடிதங்களும்

ப.ஆ.குழு, உயர் கல்வி நிறுவனங்களின் சுமூக செயற்பாட்டின் பொருட்டு ஆய்விலுள்ள வருடத்தில் 1978ன் பல்கலைக்கழகச் சட்ட இல. 16 னால் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள், செயற்பாடுகளுக்கு அமையவாகவும், சம்பளங்கள், ஆட்சேர்ப்பு, ஊழியக் கோட்புத் திட்டங்கள் போன்ற விடயங்கள் சார்பாகவும், உரிய அரசாங்க அமைப்புக்களால் செய்யப்பட்ட வழிகாட்டிகளைக் கொண்டு பின்வரும் ஆணைக்குழு சுற்று நிருபங்களையும், தாபன சுற்றறிக்கை கடிதங்களையும் வெளியிட்டது.

### (1) ஆணைக்குழு சுற்று நிருபங்கள்

| சுற்று நிருப இல. | சுற்று நிருபத் தலைப்பு | சுற்று நிருபத் திகதி |
|---|---|---|
| 973 | 2012 வரவு செலவுத் திட்ட பிரேரனைகள்களின் படி அரசாங்க, கூட்டுத்தாபன, சட்ட அமைப்புக்கள், கருத்திட்ட பணியாளர்களின் படி கொடுப்பனவுகளின் திருத்தம் | 04.01.2012 |
| 974 | பல்கலைக்கழக முறமையிலுள்ள கல்விசாரா ஆளணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புதல் | 04.01.2012 |
| 975 | 2012 வரவு செலவுத் திட்ட பிரேரணைகளின் படி பல்கலைக்கழக ஆளணியினரின் சம்பளங்களின் திருத்தம் | 13.01.2012 |
| 976 | ப.க.ஆ.கு மற்றும் உ.க.நிறுவனத்தின் தாபனக் கோவை III அத்தியாயத்தின் 18:12:1 பிரிவின் பிரகாரம் ஊழியர் நியமனங்களுக்கான அனுமதியைப் பெறல் | 12.03.2012 |
| 977 | பல்கலைக்கழகங்களினால் உள்வாரியாக நடத்தப்படும் பரீட்சைகளுக்கான கொடுப்பனவு வீதங்கள் | 14.03.2012 |
| 978 | பட்டதாரி மாணவர்களின் புள்ளிகளையும், தரங்களையும் மீள் பரிசீலிப்பதற்கான ஏற்பாடுகள | 09.04.2012 |
| 979 | பல்கலைக்கழகத்திற்கும், பல்கலைக்கழக உள்வாரி சப்-வார்டங்களின் சங்கத்திற்குமிடையேயுள்ள கைத்தொழில் பிணக்குத் தீர்ப்பின் கொடுப்பனைவை நடைமுறைப்படுத்தல | 09.04.2012 |
| 980 | கணனி தொழில் நுட்ப வழிகாட்டி உத்தியோகத்தர் பதவி (விசேட தேவைகள்) – ஆட்சேர்ப்புத் திட்டங்கள் - (மாற்று வலுவுள்ளவர்களுக்கும் அல்லது பார்வையற்றவர்களுக்கும் மட்டும்) | 16.04.2012 |
| 981 | பல்கலைக்கழகங்களினால் உள்வாரியாக நடத்தப்படும் பரீட்சைகளுக்கான கொடுப்பனவு வீதங்கள | 23.04.2012 |
| 982 | தெரிவுக் குழுக்களின் கட்டணக் கொடுப்பனவுகள் | 30.04.2012 |
| 983 | முகாரிப் பதவி (இயந்திரங்கள் / கட்டமைத்தல் / கட்டுதல்) உயர் தரம் - ஆட்சேர்ப்பு திட்டம் | 04.05.2012 |
| 984 | ஆட்சேர்ப்புத் திட்டம் - நூலக உதவியாளர் தரம் III, II, I ஆளணி உதவியாளர்/நூலக சேவைகள் மற்றும் சிரேஸ்ட ஆளணி உதவியாளர்/நூலக சேவைகள் பதவிகள் | 08.05.2012 |
| 985 | 2012 வரவு செலவு திட்டம் பிரேரணைகள் (சம்பளம்) மீதான முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபம் இல. 30(1) ஐ அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக ஆளணியினரின் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் | 15.05.2012 |
| 986 | உபகரண திருத்துனர் பதவி, III ம் தரம் பதவி முன்னேற்ற தரங்கள் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் | 16.05.2012 |
| 987 | உடற்பயிற்சி கல்வி வழிகாட்டி உத்தியோகத்தர் தரம் III ஆட்சேர்ப்பு திட்டங்கள | 16.05.2012 |

| சுற்று நிருப இல. | சுற்று நிருபத் தலைப்பு | சுற்று நிருபத் திகதி |
|---|---|---|
| 988 | கட்புல அரங்காற்றுகலைகள் பீடத்தின் பயிற்சியளிப்பவர் பதவிகள் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் | 24.05.2012 |
| 989 | திட்டமிடல் பணிப்பாளர், உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிப்பாளர் – ஆட்சேர்ப்பு திட்டங்கள் - 01.06.2012 | 29.05.2012 |
| 990 | கற்கை விடுதலையிலுள்ள கல்விசார் அணியினருக்கு ஆராய்ச்சி விசேட படி கொடுப்பனவுகள் | 31.07.2012 |
| 991 | ப.மா.ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டு தெரிவுக் குழுக்களில் சேவையாற்ற நியமனம் பெற்றோர் | 06.08.2012 |
| 992 | 2003.09.09 திகதியுடைய ஆணைக்குழுவின் சு.நி. இல. 830 படி செலுத்தப்பட்ட கற்கை நெறிக்கான கட்டணத்தை மீள் செலுத்தல் | 23.08.2012 |
| 993 | உடற்பயிச்சி நிலைய சேவையாளர் – கீழ்மட்டம், உயர்மட்ட தரங்கள் - ஆட்சேர்ப்பு திட்டம். | 30.08.2012 |
| 994 | தகுதிகாண் நிலையிலுள்ள ஊழியர்களின் ஒத்துமாறல்கள் | 26.09.2012 |
| 995 | கணனி பட்டங்களை சர்வதேச தரங்களற்கு ஏற்ப வகைப்படுத்தல் | 28.09.2012 |
| 996 | சிரேஸ்ட விரிவுரையாளர் பதவிகள் தரம் II (மருத்துவம் பல் / மருத்துவம்) மற்றும் (மருத்துவம் பல் / மருத்துவம் சாராதது) ஆட்சேர்ப்புத் திட்டம். | 09.10.2012 |
| 997 | கூட்டிணைந்த சம்பள படிகள் கொடுப்பனவு | 21.12.2012 |

## 02. தாபன சுற்று நிருபக் கடிதங்கள்

| தாபன சுற்று நிருப கடித இல. | சுற்று நிருபக்கடிதத்தின் தலைப்பு | திகதி |
|---|---|---|
| 01/2012 | பல்கலைக்கழக பணியாளர்களுக்கு விசேட முற்பணம் வழங்கல் - 2012 | 04.01.2012 |
| 02/2012 | நேரடித் ஆட்சேர்ப்பான – தகுதிகாண் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கான வெளிநாட்டு பட்டப்பின்படிப்பு கற்கைகளுக்கான நிதி உதவி | 17.01.2012 |
| 03/2012 | ஆட்சேர்ப்பு திட்டத்தின் 4ம் பிரிவின் கீழ் (தகுதிகாண்) விரிவுரையாளர்களுக்கான நியமனம் | 18.01.2012 |
| 04/2012 | காலியிலிருந்து இந்துருவைக்கான புகையிரதப் பாதையை புனர்நிர்மாணம் செய்வதனால் ஏற்படும் கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கும் அரச அதிகாரிகளுக்கு நிவாரணம் வழங்கல் | 27.01.2012 |
| 05/2012 | சில தொழில் சங்கங்களினால் மேற்கொள்ளப்படும் தொழிற் சங்க நடவடிக்கை | 22.02.2012 |
| 06/2012 | உதவி பதிவாளர் (நூலக சேவைகள்) மற்றும் உதவிச் செயலாளர் உதவி பதிவாளர் (சட்டமும், ஆவணப்படுத்தலும்) ஆகிய பதவிகளை தரமுயர்த்துதல் | 30.03.2012 |
| 07/2012 | வருதைதரும் ஆளணியினரின் கட்டணங்களும், பயணச் செலவு கொடுப்பனவுகளும் | 16.04.2012 |
| 08/2012 | நடைமுறைப் பயிற்சிகளுக்காக அரச நிறுவனங்களில் பயிலுனர்களை இணைத்தல் | 23.04.2012 |
| 09/2012 | (நேரடி ஆட்சேர்ப்பு) விரிவுரையாளர்கள் (தகுதிகாண்), சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆகியோருக்கு வெளிநாட்டில் பட்டப்பின்படிப்பிற்காக நிதி உதவி | 15.05.2012 |
| 10/2012 | சில தொழில் சங்கங்களினால் மேற்கொள்ளப்படும் தொழிற் சங்க நடவடிக்கை | 21.05.2012 |

| தாபன சுற்று நிருப கடித இல. | சுற்று நிருபக்கடிதத்தின் தலைப்பு | திகதி |
|---|---|---|
| 11/2012 | தொழிற் சங்க நடவடிக்கை | 30.05.2012 |
| 12/2012 | அலுவலக சீருடைகளுக்கான தையல் கட்டணங்கள் | 19.06.2012 |
| 13/2012 | 2012ம் வருட வரவு செலவுத் திட்டத்தின்படி அரச, கூட்டுத்தாபன, அரசார்பான சபைகள் மற்றும் கருத்திட்ட ஆளணியினரின் சம்பள படிகளை மீளமைத்தல் | 23.07.2012 |
| 14/2012 | 2012 – ரமலான் (ரம்சான்) காலப்பகுதியில் விசேட லீவு வழங்கள் | 24.07.2012 |
| 15/2012 | பல்கலைக்கழகத்தின் உப-வேந்தருக்கு அளிக்கப்படும் சம்பளமும், படிகளும் | 17.09.2012 |
| 16/2012 | பீடமொன்றின் பீடாதிபதியைத் தெரிவுசெய்தல் | 30.10.2012 |

## ப.மா.ஆ. நிதிநிலைமை கூற்று

| 2012 டிசெம்பர் 31ம் திகதி ஐந்தொகை | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறையில்லாச் சொத்துக்கள்** | | |
| சொத்து, இயந்திரம், உபகரணங்கள் | 545,594,270 | 561,402,047 |
| முதலீடுகள் | 34,876,495 | 35,039,813 |
| | 580,470,765 | 596,441,860 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| இருப்புக்கள் | 3,668,369 | 4,209,635 |
| வியாபார மற்றும் ஏனைய பெறக்கூடியவைகள் | 63,757,518 | 37,341,873 |
| முற்கொடுப்பனவுகளும், வைப்பீடுகளும் | 3,383,369 | 2,239,413 |
| காசும், காசிற்கு சமமானவைகளும் | 6,104,707 | 14,755,811 |
| | 76,913,961 | 58,546,732 |
| **மொத்த சொத்துக்கள்** | **657,384,726** | **654,988,593** |
| **உரிமையாண்மையும் புரிப்புக்களும்** | | |
| **திரட்டு நிதியம்** | | |
| இடைநிறுத்தப்பட்ட மூலதன மானியங்களை | 27,441,758 | 41,006,818 |
| சேலவிடப்படா மூலதன மானியங்களை | 4,066,949 | 6,493,386 |
| இடைநிறுத்தப்பட்ட புனருத்தபான மற்றும் நிலையான சொத்துக்களை மேம்படுத்தல் | 1,126,076 | 2,616,135 |
| மீள்மதிப்பிடல் மிகை | 509,313,767 | 509,313,767 |
| தக்கவைத்துள்ள மிகை/(பற்றாக்குறை) | (22,137,450) | (29,455,544) |
| | 519,811,100 | 529,974,562 |
| **நடைமுறையில்லா பரிப்புக்கள்** | | |
| ஆராய்ச்சி நிதியம் | 18,947,759 | 17,976,407 |
| வெளிநாட்டு நிதியிடப்படட் திட்டங்கள் | - | 2,344,720 |
| குறிப்பிட்ட நிதியம் | 9,881,435 | 8,222,781 |
| பல்கலைக்கழக புலமைப்பரிசில் நிதியம் | 18,258,844 | 18,334,472 |
| ஓய்வூதிய நலன் கடற்பாடு | 35,696,924 | 38,014,686 |
| | 82,784,961 | 84,893,066 |
| **நடைமுறை பரிப்புக்கள்** | | |
| பல்கலைக்கழகங்களுக்கும், உ.க.நி. செல்மதி | 42,136,386 | 22,166,423 |
| வியாபார மற்றும் ஏனைய செல்மதி | 7,892,499 | 8,684,565 |
| குத்தகை கடன்கொடுநர் - இலங்கை மேர்ச்சன்ட் வங்கி லிமிட. | 4,386,659 | 8,773,332 |
| வைப்பீடுகள் | 373,119 | 496,645 |
| | 54,788,664 | 40,120,965 |
| **மொத்த உரிமையாண்மையும், பரிப்புகளும்** | **657,384,726** | **654,988,593** |

ஒப்பம் பேரா. (திருமதி) S.S.M.K.K.ஹிரிம்புரேகம
தலைவர்

ஒப்பம்.R.A.U. ரணவீர
கணக்காளர்

## 2012 டிசெம்பர் 31ல் முடிவடைந்த வருடத்திற்காக ப.மா.ஆ வரவு, செலவு கூற்றுக்கள்

| | 2012<br>ரூபா. | 2011<br>ரூபா |
|---|---|---|
| **வருமானம்** | | |
| **அரசாங்க மானியங்கள்** | | |
| மீண்டெழும் மானியங்கள் | 1,085,874,583 | 640,903,460 |
| நி.சொ. புனருத்தமும், மேம்படுத்தல் | 9,490,059 | 11,317,941 |
| மூலதன மானியங்கள் திரட்டு | 22,991,495 | 9,221,251 |
| தெற்காசிய பல்கலைக்கழத்திற்கான பங்களிப்பு | 70,359,281 | 28,641,193 |
| KEIDக்கான மூலதன மானியங்கள் | 398,514,723 | 440,534,432 |
| **மொத்த அரசாங்க மானியங்கள்** | **1,587,230,141** | **1,130,618,276** |
| ஏனைய வருமானம் | 19,739,390 | 12,003,005 |
| | **1,606,969,531** | **1,142,621,281** |
| **கழி - செலவீனங்கள்** | | |
| ஆளணி வேதனங்கள் | 112,104,960 | 104,030,831 |
| போக்குவரத்து செலவுகள் | 1,419,918 | 789,776 |
| வினியோகங்கள் | 10,896,944 | 8,422,527 |
| பராமரித்தல் | 7,383,341 | 4,133,947 |
| ஓபந்த செலவீனம் | 22,421,462 | 19,607,399 |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 36,269,554 | 26,191,382 |
| புனருத்தாபன செலவீனம் | 9,490,059 | 11,317,941 |
| நிலையான சொத்துக்களின் தேய்மானம் | 22,991,495 | 19,279,652 |
| மாணவர் நிதி உதவி | 384,860,380 | 483,898,368 |
| ப.க. /உ.க.நி நதி உதவி | 993,956,286 | 469,175,624 |
| | **1,601,794,400** | **1,146,847,447** |
| 2012ம் வருடத்திற்கான மிகை/(பற்றாக்குறை) 2012 | 5,175,131 | (4,226,165) |

**ப.மா. ஆணைக்குழு**

**2012 டிசெம்பர் 31ல் முடிவவைருடத்திற்கான காசுப் பாய்ச்சல்**

| | 2012 | 2011 |
|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| செயற்பாட்டு மிகைகள்/(பற்றாக்குறை) | 5,175,131 | (4,226,165) |
| **சீராக்கல்** | | |
| தேய்மானம் | 22,991,495 | 19,279,652 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 3,610,826 | 11,440,386 |
| நிலையானசொத்துக்கள் விற்பனையின் இலாபம் /நட்டம் | 1,442,719 | (900,466) |
| வட்டி செலவீனங்கள் | 912,773 | 912,773 |
| மூலதன மானியத் திரட்டு | (22,991,495) | (20,539,192) |
| புனருத்தாபன மானியத் திரட்டு | (9,490,059) | - |
| செயற்பாட்டு மிகை(பற்றாக்குறை) | **1,651,390** | **5,966,988** |
| **தொழிற்படும் மூலதனத்தின் மாற்றங்கள்** | | |
| இருப்புக்களின் அதிகரிப்பு | 541,266 | (2,350,962) |
| பெறவேண்டியவைகளின் அதிகரிப்பு | (26,415,645) | 6,755,474 |
| முற்கொடுப்பனவுகளின்அதிகரிப்பு | (1,143,956) | (379,241) |
| உ.க.நி.க்குரிய கொடுப்பனவுகளின் அதிகரிப்பு | 19,969,963 | 2,113,399 |
| வியாபார கடன்கொடுநரின் குறைவு | (792,067) | (4,006,058) |
| வைப்வீடுகளின் குறைவு | (123,526) | 209,630 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு | (6,312,574) | 8,309,230 |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | (3,785,625) | (7,505,093) |
| வட்டி கொடுப்பனவுகள் | (912,773) | (912,773) |
| **அறுதி செயற்பாட்டு நடவடிக்ககைளிலிருந்த தேறிய காசு** | **(11,010,973)** | **(108,636)** |
| **முதலீட்டு நடவடிக்ககைளிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| சொத்து, இயந்திரம் உபகரணங்களைப் பெறல் | (8,626,436) | (7,298,950) |
| நிலையான சொத்துக்களை விற்றல் | - | 2,103,800 |
| நிலையான வைப்பீடுகளில் முதலீடு | 163,318 | (2,336,749) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(8,463,118)** | **(7,531,899)** |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| பெற்றுக்கொண்ட மூலதன மானியங்கள் | 8,000,000 | 2,000,000 |
| புனருத்தாபன மானியங்களை | 7,000,000 | 3,500,000 |
| ஆராய்ச்சி நிதியத்தின் அதிகரப்பு | 971,352 | 541,666 |
| வூகனங்களின் குத்தகை கொடுப்பனவு | (4,386,668) | (4,386,668) |
| வெளிநாட்டு நிதியிட்ட திட்டங்களின் பெறப்பனவுகள் /கொடுப்பனவுகள் | (2,344,720) | 118,463 |
| குறிபிட்ட நடவடிக்ககைகளுக்காக பெறப்பட்ட நிதி | 1,658,654 | 1,044,364 |
| புலமைப்பரிசில் நிதியத்திற்கான பெறப்பனவுகள்/ கொடுப்பனவுகள் | (75,628) | 2,241,895 |
| **நிதியிடல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **10,822,989** | **5,059,720** |
| **தேறிய காசு பாய்ச்சல்** | **(8,651,103)** | **(2,580,817)** |
| 01.01.2012லிலுள்ள காசு | 14,755,811 | 17,336,628 |
| **31-12-2012ல் காசு** | **6,104,707** | **14,755,811** |

**குறிப்பு 1**

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி-2323284 | (89,970,566) | 8,879,569 |
| இலங்கை வங்கி – வெளிநாட்டு திட்டங்கள் | 277,940 | 277,940 |
| இலங்கை வங்கி – பல்கலைக்கழக புலமைப்பரிசில் நிதியம் | 5,797,333 | 5,598,302 |
| மறுநாள் வைப்பீடுகள் இ.வ.கணக்கு இல. 2323284 | 90,000,000 | |
| | **6,104,707** | **14,755,811** |

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
# 2012 டிசெம்பர் 31ல் முடிவடைந்த வருடத்திற்கான
# உரிமை மூலதனத்திலுள்ள மாற்றங்கள் கூற்று

| | திரட்டிய நிதியம் | மிகை/(பற்றாக்குறை) | மீள்மதிப்பிட்ட மிகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2010 ஜனவரி 1ம் திகதியன்று மீதி | 56,138,127 | (40,384,588) | 515,365,273 | **531,118,812** |
| தேய்மானத்திற்கான சீராக்கல் | - | 5,184,568 | - | **5,184,568** |
| சோத்துக்களின் தேய்மானத்திற்காக மானியங்களில் திரட்டியது | (6,021,788) | - | (6,051,506) | **(12,073,294)** |
| 2010க்கான மொத்த வருமானம்/(பற்றாக்குறை) | - | 9,970,641 | - | **9,970,641** |
| 31/12/2010ல் மீதி | **50,116,339** | **(25,229,379)** | **509,313,767** | **534,200,727** |
| 2011க்கான மொத்த வருமானம்/(பற்றாக்குறை) | - | (4,226,165) | - | (4,226,165) |
| 31/12/2011ல் மீதி | **50,116,339** | **(29,455,544)** | **509,313,767** | **529,974,562** |
| ***2012 உரிமையில் மாற்றங்கள்*** | | | | |
| வேலையைவிட்டு நீங்கியோருக்கான பனிக்கொடைக்கான ஏற்பாடுகள் | - | 2,142,963 | - | 2,142,963 |
| அதிகரித்த மூலதன மானியங்கள் | 5,509,939 | - | - | 5,509,939 |
| சொத்துக்களின் தேய்மானத்திற்காக மானியங்களில் திரட்டியது | (22,991,495) | | | (22,991,495) |
| 2012ற்கான மொத்த வருமானம் /(பற்றாக்குறை) | - | 5,175,131 | - | 5,175,131 |
| 31/12/2012ல் மீதி | **32,634,783** | **(22,137,450)** | **509,313,767** | **519,811,100** |

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
**UNIVERSITY GRANTS COMMISSION**

මගේ අංකය / எனது இலக்கம் / My Number

ඔබේ අංකය / உமது இலக்கம் / Your Number

තැපැල් පෙට්ටිය / அஞ்சல் பெட்டி / Post Office Box } 1406

20, වෝඩ් පෙදෙස, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
20, வாட்டு இடம், கொழும்பு 07, இலங்கை.
20, Ward Place, Colombo 07, Sri Lanka.

2014.01.06

பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் திணைக்களம்
306/72 பொல்தூவ வீதி
பத்திரமுல்லை.

**பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட 2013 ஒத்தோபர் 11 ஆந் திகதியுடைன ஈசீ.்.பீ.்.யூபிஎவ் .்.எவ்ஏ.்.2012 ஆம் தொடர்பிலக்க உங்களுடைய கணக்காய்வு அறிக்கை சார்பாக எனது கருத்துரைகளும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2013 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களுடன் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) இனங்காணப்படாத மீதி ரூபா 6,851,305

குழுவொன்று நியமிக்கப்பட்டு புலனாய்வு மேற்கொள்ளப்படுகின்றன.

දුරකථනය / தொலைபேசி / Telephone } 2695301, 2695302, 2692357
ෆැක්ස් / பெக்ஸ் / Fax } 2688045
වෙබ් අඩවිය / வெப் தளம் / Web Site } http://www.ugc.ac.lk

(ஆ) செயற்பாடற்ற உறுப்புரிமை ஒதுக்கக் கணக்கு ரூபா 8,000,000

இந்த விடயங்கள் அங்கீகாரத்திற்காக இறுதிக் கணக்குகளாக ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அது அங்கீகாரத்திற்கும் உட்படுத்தப்பட்டன.

(இ) செலுத்த வேண்டிய நிலுவையாகவிருந்த வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 270.4 மில்லியன்

வாழ்க்கைச் செலவுப்படி மீது செலுத்த வேண்டிய நிலுவையாகவிருக்கின்ற ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு கணிப்பீட்டின் பின்னர் பல்கலைக்கழகங்களால் கணக்காய்வு செய்யப்பட்டு எங்களுக்கு மாத்திரம் அனுப்பப்பட்டது. நாங்கள் அந்த உறுப்பினர் கணக்குகளிற்கு செலவு வைக்கப்படுகின்றன.

### 2.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) உடன்பட்டிருக்கவில்லை

மீதிகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவின்படி கோரப்படாத மீதிகள் தொடர்பில் கணக்குகள் இறுதியாக்கும் நேரத்தில் அவற்றின் மீதான வட்டி கோரப்பட்டிருக்கவில்லை. உறுப்பினர்கள் வட்டியை கோரியிருக்காத போது, கணக்குகள் இறுதியாக்கும் நேரத்திலிருந்து வட்டி கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதேநேரம் வட்டியினை உறுப்பினருடைய கணக்கிற்கோ அல்லமு அரசாங்க வருமானத்திற்கோ செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு பல்கலைக்கழகங்களிற்கு செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதிகளாக ரூபா 41,600 மீதி காட்டப்பட்ட போதிலும் இது அந்த இரண்டு பல்கலைக்கழகங்களால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அத்தகைய மீதிகள் அறவிட வேண்டியவையாக அவர்களுடைய கணக்குப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை. எனவே, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் மீதிகளை வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

(அ) 2011 மார்ச் 23 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம்

மேற்குறிப்பிட்ட சகல விடயங்களை மேவுவதற்காக அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கட்டளைச்சட்டம்

வரைவுக் கட்டளைச் சட்டம் தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

(இ) 3/.2001 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை

சுற்றறிக்கையின்படி சேமலாப நிதியப் பங்களிப்புக்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களால் உரிய மாதங்களிற்கான கடன் தீர்ப்பனவுகள் அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந்திகதிக்கு முன்னர் காசோலைகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீதான தொடர் நடவடிக்கைகள் ஒழுங்காக எடுக்கப்படும்.
11 மணிக்கு முன்னர் பெறப்பட்ட காசோலைகள் அதே தினத்தில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டதுடன் 11 மணிக்குப் பின்னர் பெறப்பட்ட காசோலைகள் கட்டாயமாக அடுத்த நாள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டன. ஈடுபட்டுள்ள மேற்பார்வை உத்தியோகத்தருடன் வழமையாக இது பின்பற்றப்பட்டுள்ளது.

3. நிதிசார் மீளாய்வு

நிதிசார் விளைவுகள்

உடன்படுகின்றோம்

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியம் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டதுடன் இத்தன்படி நிதியத்தின் நிர்வாகச் செயற்பாடுகளும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள்

ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அத்தகையவாறு நிர்வாகம் மற்றும் செலவினம் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

5. **கணக்களிதன்மையும் நல்லாழுகையும்**

5.1 **செயற்பாட்டுத் திட்டம்**

ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் ஊழியர்களிற்கான மருத்துவ காப்புறுதி திட்டம் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

(ை) உறுப்புரிமைக் கட்டண விடுவிப்பு- 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ை) காசு மற்றும் வங்கி

காசு மற்றும் வங்கி செயற்பாடுகள் வழமைபோல் மேற்கொள்ளப்படுகின்றன என தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்

பேராசிரியர். ஹிரிபுறேகம
தலைவி

பிரதிகள்:
1. செயலாளர், உயர்கல்வி அமைச்சு
2. செயலாளர், நிதி மற்றும் திட்மிடல் அமைச்சு
3. உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31ல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் நஉாயகத்தின் அறிக்கை

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | க.நாயகத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்களும், அவதானங்களும் | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்<br><br>2.2.1 சட்டங்கள், விதிகள். பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை<br><br>பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன<br><br>சட்டங்கள், விதிகள் போன்றவற்றிக்கான தொடர்பு<br><br>(a) 2011 மார்ச் 23 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் | இணங்கி ஒழுகாமை<br><br>தொடர்புடைய அமைச்சரவைத் தீர்மானத்தை திருத்தம் செய்யாது, திறைச்சேரியின் இணக்கப்பாட்டுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கல்விசார் படிகளை, மொத்த உழைப்பு என்ற வரைவிலக்கணத்தில் உள்ளடக்கி 2013 சனவரி 8ம் திகிய 1000ம் இலக்க சுற்றிக்கையினை வெளியிட்டிருந்தது. அதன் படி 2012 திசெம்பர் 31ல் உள்ளபடி இவ் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக பல்கலைக்கழக சேமலாப நிதியம், ஓய்வூதிய நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியவற்றிக்க மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா. 559,29 மில்லியனாகும். | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கு 2013.01.08 திகதியுடைய 1000ம் இலக்க சுற்றுநிருபத்தை கல்விசார் படிகளையும் உள்ளடக்கிய மொத்த உழைப்பு என வெளியிட்டிருந்தது. அப்போதிருந்த இத் தொகையினை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு ஏற்பட்ட இணக்கத்தின் விளைவாக நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்ட 2012.12.21 திகதியுடைன டீஎம்எஸ் /ஈ1 வீ4/ 7/ 313 2 இலக்க கடிதப் படி இவ்வாறு செய்யப்பட்டது. | சட்டமா அதிபருக்கு பல்கலைக்கழக கல்விசார் பணியணியரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கும், முன்மொழிவிற்கும் ஏற்ப, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தை கல்விசார் படியெனக் கருதப்பட்டு, இதனை திறைச்சேரிக்கு அவரால் 2012.12.06ம் திகதியுடைய ஈ/307/2010ம் இலக்க கடிதத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கேற்ப நிதி, திட்டமிடல் அமைச்சு பல்கலைக்கழக சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகிய நோக்கங்களுக்கான பங்களிப்புக்களை கல்விசார் |

| | | | |
|---|---|---|---|
| | | | படிகளாகக் கருதும் படி அறிவுறுத்தல் வழங்கியுள்ளதுடன்,<br><br>திறைச்சேரி செயலாளரின் அறிவுறுத்தல்கள் படியும் மேலதிக கொடுப்பனவுகளை மீள்பெறுவதற்கு தேவையேற்படவில்லை. உயர் கல்வி அமைச்சினாலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் தகுந்த அங்கிகாரத்தைப் பெறுவதற்காக அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | க.நாயகத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்களும், அவதானங்களும் | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
| | | | அதற்கேற்ப நிதி, திட்டமிடல் அமைச்சு பல்கலைக்கழக சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகிய நோக்கங்களுக்கான பங்களிப்புக்களை கல்விசார் படிகளாகக் கருதும் படி அறிவுறுத்தல் வழங்கியுள்ளதுடன், திறைச்சேரி செயலாளரின் அறிவுறுத்தல்கள் படியும் மேலதிக கொடுப்பனவுகளை மீள்பெறுவதற்கு தேவையேற்படவில்லை. உயர் கல்வி அமைச்சினாலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் தகுந்த அங்கிகாரத்தைப் பெறுவதற்காக அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (b) தாபனக் கோவையின் 8ம் அத்தியாத்தின் 10.1 ஆம் பந்தி மற்றும் 1984 யூன் 12ம் திகதிய 256ம் இல. பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 1997 பெப்ரவரி 03ம் திகதிய 07/97 ஆம் இல. பொ்து நிர்வாச் சுற்றறிக்கை | தொடர்புடைய பிரமாணங்களுக்கு இணங்காத வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விடுமுறை தினங்களில் வேலை செய்தமைக்காக நாளொன்று 8 மணித்தியாலங்கள் கடமையாற்றுதல் வேண்டுமென்ற பிரிவினை நாளொன்றிற்கு 04 மணித்தியாலங்கள் வீதம் 2 நாட்களில் பூர்த்தி செய்யலாம் எனத் திருத்தம் செய்து 1997 ஏப்பிரல் 01ஆந் திகதிய 707ம் இல. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், பல்கலைக்கழ மானியங்கள் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் விடுமுறைநாட்களில் வேலை செய்ய அனுமதிக்கப்பட்டதுடன், ப.மா. ஆணைக்குழுவின் வேலைத் தன்மைக்கு ஏற்ப (விசேடமாக புதிய மாணர்வகள் சேர்ப்பின் போது) விடுமுறை நாட்களில் வேலை செய்தல் கொடுப்பனவிற்காக 8 மணித்தியாலங்களாக வரையறுக்கப்பட்டுள்ளது. | மாணவர் சேர்ப்புக் காலத்தின் போது தேவையினைக் கருத்திலெடுத்து நிறைவேற்று அதிகாரிகளுக்கு மட்டும் கொடுப்பனவுகள் செய்யப்படலாம். எனவே இதனை ஒரு விசேட நிகழ்வாகக் கருதப்பட்டு, மேற் குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தின் படி, ப.மா.ஆணைக்குழுவின் அனுமதியுடன் 1/20 பங்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு 2012 ஆம் ஆண்டில் ரூபா. 45,573 செலுத்தப்பட்டிருந்தது. | | செலுத்தப்பட்டது.<br><br>சில வேளைகளில், பிரிவின் நிறைவேற்று அதிகாரிகள் மாணவர்கள் சேர்ப்புக் காலங்களில், எல்லா விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்து, விண்ணப்பதாரிகளை விரைவாகத் தெரிவு செய்து, அவ் விபரங்களை பல்கலைக்கழகங்களுக்கு அறிவிப்பதற்காக இரவில் வேலை செய்கின்றார்கள். கிழமை இறுதிகளிலும், விடுதலை நாட்களிலும் வேலை செய்வதற்கான செயற்திறனை அடிப்படையாகக் கொண்டு படியினை செலுத்துவதற்கு முன்மொழிவொன்று திறைச்சேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. |

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | க.நாயகத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்களும், அவதானங்களும் | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| இ) நிதிப்பிரமாணம் 71 மற்றும் 2003 யுன் 2ம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10ம் பிரிவு | ஒப்பந்த, தற்காலிக அல்லது வேறு அடிப்படையில ஆட்சேர்ப்பு செய்வதற்காக திறைச்சேரி பிரதிச் செயலாளரின் முன்கூட்டிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது நான்கு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்து 2012ம் ஆண்டில் மொத்தமாக ரூபா 518,960 செலுத்தப்பட்டிருந்தது. | 2012ம் வருடத்தில், நடைமுறையிலுள்ள வேற்றிடங்களுக்காக பல்கலைகழக மானிய ஆணைக்குழுவின் பணியாளர்கோப்பை முகாமைத்துவத் திணைக்களத்தினால் அங்கிகரிக்கும் வரை பணியாளர்கள் ஒப்படை அடிப்படையில் கடமைகளுக்காக வேலைக்கமர்த்தப்பட்டார்கள். இந் நியமனங்கள் ப.க.மா. ஆணைக்குழுவின் அங்கிகாரத்துடன் செய்யப்பட்டதுடன், தேவைகேற்ப நிரந்தர ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டன. மேலும் பொது முயற்சிகள் சுற்றுநிருபத்திற்கு ஏற்ப முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து மேல் அங்கீகாரம் பெறுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இந் 4 ஊழியர்களுக்கும், நிறைவேற்று அதிகாரிகளை நியமனம் செய்யவும், அவர்களின் சம்பளங்களை செலுத்துவதற்கும் மேலான அங்கிகாரத்தைப் பெறுவதற்காக பொதுத் திறைச்சேரிக்க கடிதம் அனுப்பட்டது. ஆயினும் இது கிடைக்கவில்லை. மேலும் செயனாற்றல் அடிப்படையில் இவ் ஆட்சேர்ப்பினை இடைநிறுத்தியதையிட்டு தெரிவிப்பதற்கான ப.மா.ஆணைக்குழுவின் தலைவரினால் 8.04.2013 திகதியுடைய யூஜிசி/ பீ 2/ 5/ 33 ம் இலக்க கடிதம் கணக்காய்வாளர் நாயகத்திற்க அனுப்பட்டது. மேலும் ஏதேனும் ஆட்சேர்ப்புக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் விபரிக்கபட்டதன் படி மேற்கொள்ளப்படும். |

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | க.நாயகத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்களும், அவதானங்களும | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| **3.** நிதிமீளாய்வு<br>**3.1** <u>நிதிவிளைவுகள்</u> | சமர்ப்பிக்கட்டிருந்த நிதிக்கூற்றுக்களின்படி, ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகளினால் நிதி விளைவுகள் ரூபா. 5,175,131 மிகையொன்றானதுடன், அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா. 4,226,165 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா. 9,401,296 வளர்ச்சி ஏற்பட்டமைக்கு பின்வரும் காரணிகள் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | |
| | 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீண்டெழும் மானியம், மூலதன மானியம், தெற்காசிய பல்கலைக்கழகங்களிலிருந்தான உதவுத் தொகை மற்றும் ஏனைய வருமானங்கள் முறையே ரூபா. 444,971,123, ரூபா. 13,770,224, ரூபா . 41,718,088 மற்றும் ரூபா 7,736,385 ஆல் அதிகரித்தும் அவ்வாறே மாணவர் நிதிசார் உதவிகள் ரூபா. 99,037,988 ஆல் குறைவடைந்ததும் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான நிதி உதவிகள் ரூபா. 524,780,662 ஆல் அதிகரித்தும் காணப்பட்டமையே நிதிவிளைவுகளின் வளர்ச்சிற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | |

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | க.நாயகத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்களும், அவதானங்களும | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| **3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு** | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டின் நிதிவிளைவுகள் ரூபா. 9,401,296 ஆல் அதாவது 222 சதவீதத்தால் வளர்ச்சி கண்டிருந்தது. முக்கியமான வருமானங்கள் மற்றும் செலவீன முரண்கள் கீழே தரப்பட்டுள்ளன. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | |

| வருமானம் | 2012 | 2011 | முரண் | சதவீதம் |
|---|---|---|---|---|
| மீண்டெழும் மானியம் | 1,085,874,583 | 640,903,460 | 444,971,123 | 69 |
| மூலதன மானியம் | 22,991,459 | 9,221,251 | 13,770,224 | 149 |
| தெற்காசிய பல்கலைக்கழகளிலிருந்து உதவித் தொகை | 70,359,281 | 28,641,193 | 41,718,088 | 146 |
| அறிவை மேம்படுத்தல் மற்றும் நிறுவக அபிவிருத்திற்கான மூலதன மானியம் | 398,514,723 | 440,534,432 | (42,019,709) | (10) |
| ஏனைய வருமானங்கள் | 19,739,390 | 12,003,005 | 7,736,385 | 64 |
| **செலவீனம்** | | | | |
| வழுங்கல் | 10,896,944 | 8,422,527 | 2,474,417 | 29 |
| ஏனைய மீண்டுவரும் செலவீனம் | 36,269,554 | 26,191,382 | 10,078,172 | 38 |
| மாணவர் நிதிசார் உதவிகள் | 384,860,380 | 483,898,368 | (99,037,988) | (20) |
| .பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்ாகன நிதி உதவிகள் | 993,956,286 | 469,175,624 | 524,780,662 | 112 |

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | க.நாயகத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்களும், அவதானங்களும | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| **4. செயற்பாட்டு மீளாய்வு**<br>**4.1 .செயலாற்றல்**<br><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>(a) முன்னைய மூன்று கல்வியாண்டுகளில் பல்கலைக்கழகத்திற்கு தகமைபெற்ற மாணவர் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை மற்றும் அந்தந்த ஆண்டுகளிற்காக விடுவிக்கப்பட்ட நிதியின் அளவு மற்றும் ஒரு மாணவருக்காக விடுவிக்கப்பட்டிருந்த சராசரி நிதி தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. | (see table below) | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | புல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் தொகையின் விவரங்களைத் தருவதற்கு சேர்வதற்காக தகுதி பெற்ற மாணவர்களின் தொகையை விபரிப்பதைவிடவும், விண்ணப்பித்த மாணவர்களின் தொகை வீதத்தை தருவது நடைமுறைக்கு மிகவும் ஏற்றதாகவிருக்கும். |

| | **2011/2012** | **2010/2011** | **2009/1010** |
|---|---|---|---|
| பல்கலைக்கழகத்திற்கு தகமைபெற்ற மாணவர் எண்ணிக்கை | 141,411 | 142,516 | 125,284 |
| பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக் கொள்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை | 28,937 | 22,016 | 21,547 |
| பல்கலைகழகத்திற்கு தகமைபெற்ற எண்ணிக்கையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை சதவீதமாக (நூற்றிற்கு) | 20 | 15 | 17 |
| | **2012** | **2011** | **2010** |
| செலவிடப்பட்ட மீண்டுவரும் சேலவினம் (ரூபா.'000) | 14,611,003 | 12,961,095 | 10,865,900 |
| மொத்த மாணவர் எண்ணிக்கை | 7 2,937 | 77,640 | 73,398 |
| ஒரு மாணவருக்கான சராசரி மீண்டுவரும் செலவினம் (ரூபா.) | 200,323 | 166,938 | 148,040 |

| | | | |
|---|---|---|---|
| | 2011/2012 ஆம் கல்வி ஆண்டிற்கான பல்கலைக்கழகத்திற்க தகமைபெற்ற மாணவர் எண்ணிக்கையில் 20 சதவீதமானோர் மாத்திரம் பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதுடன் மாணவர் ஒருவருக்கான சராசரி மீண்டுவரும் செலவினம் ருபா. 200,323. ஆக இருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்திற்கு விண்ப்பித்திருந்த மாணவர் எண்ணிக்கையில் 49 சதவீதமானோர் மாத்திரம் பல்கலைகழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். | | |

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | க.நாயகத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்களும், அவதானங்களும் | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| (b) யாழ்ப்பாணப் பல்கலைக்ககழகத்தில் பொறியியல் பீடத்தை நிறுவுதல் | யாழ்பாணப் பல்கலைக்கழத்தில் பொறியியல் பீடத்தை நிறுவும் நடவடிக்கைகான ஒரு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டு 2010 நவம்பர் மாதத்திலிருந்து 2011 யூலை வரை ரூபா. 730,552 தொகை செலுத்தப்பட்டிருப்பதுடன், அவரது அறிக்கையின்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடமொன்று நிறுவப்படுதல் வேண்டுமெனவும் 2011/2012 ஆம் கல்வியாண்டிற்காக ஐம்பது மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டுமெனவும் 2013ஆம் ஆண்டில் உள்ளவாறு அவ்வெண்ணிக்கையை நூறு மாணவர்கள் வரை அதிகரிப்படுதல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2011/2012 ஆம் கல்வியாண்டிற்காக அப் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2011 நவம்பர் 5ம் திகதியிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடமொன்று நிறுவப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகளுக்காக அமைச்சரவை 2400 மில்லியளை அங்கீகரித்துள்ளதுடன், அது தற்பொழுது வினியோகிக்கப்பட்டுள்ளது. | 19.12.2012ல் முன்மொழியப்பட்ட பொறியில் பீடத்தை அரவியர் நகரில் நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. 2014ல் கட்டுமானப்பணி ஆரம்பமாகும். |
| (c) பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை தெரிவு செய்தல் மற்றும் அனுமதிப்பதற்காக மென்பாக முறைமையொன்றினை நிறுவுதல் | பல்கலைகழகங்களிற்கு மாணவர்களை தேர்ந்தெடுப்பதற்காக மென்பாக முறைமையொன்றை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கைகள் நிறுவனத்தின் (University of Colombo School of Computing) மூலம் நிறுவிக்கொள்ளும் ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தத் தொகையில் 80 சதவீதம் அல்லது ரூபா. 1,520,000 தொகை 2013 ஏப்பிரல் 3ம் திகதிய 843.3 அம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி இக் கொடுப்பனவு 21ம் நூற்றாண்டிற்கான உயர் கல்விச் செயற்திட்டத்திலிருந்து மீளளிக்கப்பட வேண்டியிருந்தும், மீளாய்வாண்டின் இறுதிவரை மீள்நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழக அனுமதி மென்பொருளை பின்வரும் காரணங்களுக்காக எதிர்பார்க்கப்பட்டவாறு பூர்த்திசெய்ய முடியவில்லை.<br>பல்கலைக்கழ அனுமதி சிக்கலானதொரு விடயமாகும். ஆதனால் சென்ற கல்விசார் வருடத்தை மென்பொருள் முறைமையைப் பரிசீலிக்கப் பயன்படுத்த முடியாது.<br><br>உட்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் படி | HETC ஊடாக பல்கலைக்கழகத்தின் மற்றைபதொரு கணனி நிகழ்ச்சி திட்டத்திற்காக ஒதுக்கீட்டினை வழங்க கருதமுடியுமெனத் அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | 20112012 கல்வியாண்டிற்கான அனுமதிகள் தொடர்பான கொள்கைகள்/முறைகள்களை மீள்கட்டமைப்பு செய்யவேண்டியுள்ளது. அனுமதி முறைமையில் காலதாமதமுள்ளதால், IRQUE நிகழ்ச்சித் திட்டம் பூர்த்திசெய்யும் முன்னர் ஏற்பாட்டினைப் பெற்றுக் கொள்ள முடியாது. | |

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | க.நாயகத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்களும், அவதானங்களும் | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| (d) மையப்படுத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வு முறையொன்றை ஏற்படுத்தல் | பல்கலைக்ககழக முறைமைக்குள் மையகப்படுத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வு முறையொன்றை ஏற்படுத்துவதற்கான விடயங்களை ஆராய்ந்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக 2007 மார்ச் 05 முதல் மாதத்திற்கு ரூபா. 50,000 படியினைச் செலுத்தும் அடிப்படையில் 06 மாதங்களிற்காக ரூபா. 300,000 செலவில் மதியுரைஞர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். மதியுரைஞர் சகல விடயங்களையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றை 2007 ஏப்பில் 11ம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்திருந்த போதிலும் இவ்வறிக்கை 5 ஆண்டு காலத்தில் அமுலாக்கப்படவில்லை. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | உள்ளக கணக்காய்வு முறையை நிறுவது தொடர்பான ஆலோசனை அறிக்கையிலுள்ள சிபார்சை பல்கலை முறைமைக்குள் படிப்படையாக நடைமுறைப்படுப் படுத்தப்படுகின்றது. |
| (e) | 2012ம் ஆம் ஆண்டின் இறுதியில் ஊழியர் அபிவிருத்தி நிதியத்தில் ரூபா. 5,356,873 மீதியொன்று காணப்பட்ட போதிலும், அப்பணத்தினைப் பயன்படுத்திக் கொள்ளாது மீளாய்வாண்டில் இடம் பெற்ற ஊழியர் அபிவிருத்தி நிகழ்ச்சிக்காக அரசாங்க நிதியிலிருந்து ரூபா. 933,122 பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தது. | | . |
| 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை<br><br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன | (a) 2012ஆம் ஆண்டிற்காக அறிவினை மேம்படுத்தல் மற்றும் நிறுவக அபிவிருத்திற்காக (KEID) 20 உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் உயர் கல்வி அமைச்சிக்க ரூபா. 396,994,000 கூட்டுத் தொகையான பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2012ம் ஆண்டின் இறுதிவரை 50 சதவீதத்திற்கும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்த 13 சந்தர்ப்பாங்கள் அவதானிக்கப்பட்டன. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ப.மா.ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஒவ்வொரு மானியத்திலின் செலவீனத்தில் எடுக்கப்படும் தொடர் நடவடிக்கை 31.12.2012ல உள்ளபடி பயன்பாடு இணைப்பு 1ல் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | க.நாயகத்திற்க ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்களும், அவதானங்களும் | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| | (b) <u>தெரிவு செய்யப்பட்ட 6 தேசிய பல்கலைக்கழகங்களை உலக தரத்திலுள்ள பல்கலைக்கழகம் வரை தரமுயர்த்தல்</u><br><br>உலக தரத்திலுள்ள பல்கலைக்கழகம் வரை தரமுயர்த்துவதற்காக 06 பல்கலைக்கழகங்களிற்கு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்காக முறையே ரூபா. 100 மில்லியன் ரூபா. 75 மில்லியன் வீதம் வழங்கப்பட்டடிருந்த போதிலும், மொறட்டுவை மற்று உருகுணைப் பல்கலைக்கழகங்களின் உலக தரப்படுத்தல் மட்டம் 2011 ஆம் வருடத்தைக் காட்டிலும் 2012 ஆம் வருடத்தில் வீழ்ச்சியடைந்தருந்தது. | குறிப்பிட்ட நிகழச்சித்திட்டத்தின் கீழ் பேராதனிய, மொரட்டுவை, கொழும்பு, சிறி ஜயவர்த்தன புர, களனிய, உறுகுணை பல்கலைக்கழங்களுக்காக திறைச்சேரி ரூபா. 450 மில்லியனை ஒதுக்கியது. நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதிகளை குறிப்பிட்ட ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும பயன்படுத்தும்.<br>நிகழ்ச்சித் திட்டத்தின் தேவையைப் பொறுத்து பல்கலைக்கழகங்கள் திறைச்சேரியிடமிருந்து நிதியைப் பெற பல்கலைக்கழகங்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பல்கலைக்கழகம் தொடர்பான உலக பல்கலைக்கழகத் தரத்தை நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றை மீள்பார்வைசெய்யும் தரமாக பயன்படுத்தப்படுகின்றது. இத் தகவல்கள் இணைப்பு 2ல் உள்ளன. | தொடர்பான முன்னேற்றம் அரைவருட, வருட முன்னேற்ற மீள்பார்வை அறிக்கைகளாலும், கூட்டங்களாலும் மதிப்பிடப்பட்டன. தேவையான ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | க.நாயத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்களும், அவதானங்களும் | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் | உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டமையிலிருந்து அறவிடப்பட்ட தொகைகளை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக திறைச்சேரியின் அங்கீகாரமின்றி பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் 737 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினாலும் உடன்படிக்கைகள மீறிய விரிவுரையாளர்கள் என்ற பெயரில் நிதியமொன்று பேணிவரப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் பல்கலைக்கழகங்களின் பல்வேறு செலவினங்களிற்காகவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. 19 பல்கலைக்கழகங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் படி இந்நிதியத்தின் மொத்த தொகை ரூபா. 548,714,372 ஆக இருந்தது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உடன்படிக்கை பிணைமுறிகள் மீறப்பட்ட நிதியத்தின் (Bond Violation Fund) மீதி ரூபா. 843,258 ஆகக் காணப்பட்டது. | இந் நிதியம் பொதுத் திறைச்சேரியின் அனுமதியுடன் நிறுவப்பட்டது. | நிதியின் நிலுவையை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 4.4 நிதிகளின் குறைப்பயன்படுத்தல்<br><br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | (அ)2012ஆம் வருடத்தின் இறுதியில் செலவிடப்படாத (நிலையான சொத்துக் கொள்வனவுகள்) மூலதன மானிய மீதி ரூபா. 4,066,949 ஆகக் காணப்பட்டதுடன், 2012 ஆம் வருடத்திற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு (நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு) கிடைத்திருந்த மூலதன மானியமும். சேலவிடப்படாத மூலதன மானியமும் கணக்கின் முன் கொண்டுவரப்பட்ட மீதிகளின் ரூபா. 6,493,386 கூட்டுத் தொகையுடன் ஒப்பிடுகையில் பயன்படுத்தப்பட்டிராத அளவு 30 சத வீதமாகக் காணப்பட்டது. | நிலையான சொத்துக்களை பெறுவதற்கான ஒதுக்கீடுகளின் கீழ் செலவிடப்படாத முதலீட்ட ஏற்பாடுகளின் பெறுமதி ரூபா. 3,560,652 ஆகும். வருடத்தின் போது செலவீனம் ரூபா. 8,620,436 | தொடர்பான கணக்கில் சீர்செய்வதற்கு குறிபிலெடுக்கப்பட்டுள்ளது. |

<table>
<tr><th>நிதிக் கூற்றின் விளைவு</th><th>கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள்</th><th>க.நாயத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புகளும், அவதானங்களும்</th><th>எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும்</th></tr>
<tr><td></td><td>(ஆ) ரூபா. 9,872,568 கூட்டுத் தொகையுடன் 3 விசேட நிதியங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் காணப்பட்ட போதிலும், அந் நிதியங்கள் செயற்படு நிலையில் காணப்படவில்லை.</td><td>ஆரம்ப மீதியும், வருடத்தில் பெறப்பட்ட ஒதுக்கீட்டின் மொத்தம் ரூபா. 12,187,089. அதன்படி செலவிடாத ஒதுக்கீடு 29%<br><br>அவதானங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>
<table>
<tr><th>நிதியத்தின் பெயர்</th><th>காரணம்</th></tr>
<tr><td>1. பொது ஆய்வு நிதியம்</td><td rowspan="2">2012ல் இந் நிதியம் நடைமுறையிலில்லை. நிதியத்தை பயன்படுத்த திட்டங்களுள்ளன.</td></tr>
<tr><td>2. சிறிமதி இந்திராணி ஞாபகார்த்த நிதியம்</td></tr>
<tr><td>3. ஊழியர்கள் அபிவிருத்தி நிதியம்</td><td>இந் நிதியங்கள் முதலீட்டதிலிருந்து பெறப்பட்ட வருமானம் ஊழியர்களின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படுகின்றது . இந் நிதியம் தொடர்ந்து ஊழியர்களுக்காக பயன்படுத்தப்படுகின்றது . .</td></tr>
</table>
</td><td>இந் நிதியங்களை நிறுவியதன் நோக்கங்கள் ஊழியர்களின் அபிவிருத்தி நிதியத்தால், ஊழியர் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிதிகளை வினியோகிப்பதாகும்.</td></tr>
</table>

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | க.நாயத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்களும், அவதானங்களும் | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| | | தேசிய விஞ்ஞான மன்றம் \| ப.மா.ஆணைக் குழுவிற்கு தேசிய விஞ்ஞான மன்றத்தினால் செய்யப்பட்ட ஒதுக்கீட்டிலுள்ள சேமிப்பை இது பிரதிநிதிப்படுத்துகின்றது. இதனை ப.மா. ஆணைக்குழுவின் வருமானத்தில் கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இறுதிக் கணக்கில் இதன் தொடர்பான சீர்படுத்தல்கள் செய்யப்பட்டள்ளன. |
| | (இ) ரூபா. 11,561,215 தொகையான 98 புலமைப்பரிசில் நிதியங்களில் 24 மாத்திரம் செயற்பட்டிருந்ததுடன், ரூபா. 6,973,948 தோகையான 74 புலமைப்பரிசில் நிதியங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டன. 2012 ஆம் வருடத்தில் 10 புலமைப்பரிசில்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | சகல செயலற்ற கல்வி புலமைப்பரிசில் நிதியங்களும் வலுப்படுத்தப்பட்டு, ப.மா.ஆணைக்குழு பொது கல்விபுலமைப்பரிசில் நிதியம் என நிறுவப்பட்டுள்ளது. இதன் வருமானத்திலிருந்து கல்விபுலமைப்பரிசில் வழங்கத் திட்டங்கள் இடப்பட்டுள்ளன. | 02.02.2013 ல் இடம் பெற்ற 867வது கூட்டத்தின் படி பொது கல்வி புலமைப்பரிசில் நிதியங்களை நிறுவ அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதன்படி நிதியம் நிறுவப்பட்டது. 2011 2012லிருந்து மாதாந்த தவணை கொடுப்பனவாக ரூபா. 2,500 கொண்ட 10 கல்விப் புலமைப்பரிசில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | க.நாயத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்களும், அவதானங்களும் | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| **4.5** பதவியணியினர் நிர்வாகம் | ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31இல் உள்ளவாறான அங்கீகரித்த பதவியணியினர் 288 ஆன போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 200 ஆகக் காணப்பட்டமையால் 88 ஊழியர் வேற்றிடங்கள் அவதாணிக்கப்பட்டன. | அவதானம் ஏற்கப்பட்டுள்ளது | ப.மா. ஆணைக்குழுவின் தேவைகளுக்கு ஏற்ப வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **4.6** ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ஆணைக்குழுவின் வளங்கள் | 1997 சனவரி 24ஆம் திகதிய 116ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் மற்றும் 2003 யூன் 02ஆம் திகதிய பீஈடி/112 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.4 பந்திக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மூன்று ஊழியர்கள் அமைச்சின் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டு 2012ஆம் வருடத்தின் போது, அந்த ஊழியர்களுக்கு சம்பளமாக ரூபா. 721,072 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ப.மா. ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் தற்போதைய ஆட்சேர்ப்பு கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஆணைக்குழு சுற்றுநிருபம் இல. 876ன் படி பின்வரும் ஊழியர்கள் வேலைக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள்.<br>1. செல்வி.ஐ.என் தயாரத்ன, லிகிதர்<br>2. டவ்ளியூ.ஜி. ஹேமபால, தொழிலாளி<br>3. சுமுது லக்மாலி – கணனி பிரயோக உதவியாளர்.<br><br>மேற்குறிப்பிட்ட 3 ஊழியர்களும் உயர் கல்வி அமைச்சின் வேண்டுகோளுக்கும், ப.மா.ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அமைச்சு அலுவலகத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள்.<br><br>அதன்படி தொடர்பான பதவிகளுக்கான சம்பளங்கள் ப.மா.ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டன. | கௌரவ உயர் கல்வி அமைச்சரின் வேண்டுகோளுக்கு ஏற்ப ப.மா. ஆணைக்குழுவின் அனுமதியுடன் இரு தொழிலாளிகள் உயர் கல்வி அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் ஒருவர் தற்பொழுதும் உயர் கல்வி அமைச்சில் உள்ளார். |

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| **5. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை** | | | |
| **5.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்** | 1978ம் வருடத்தின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்களின் அதிகாரச் சட்டத்தின் 16ஆம் பிரிவின் படி நிதியாண்டு முடிவடைந்து 06 மாதங்கள் கடந்து செல்வதற்கு முன்னர் ஆண்டறக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2011ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்ளமுடியாது. | தற்பொழுது 2011ம் வருடத்திற்கான வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.. |
| **5.2 கொள்வனவுத் திட்டம்** | ஆணைக்குழுவினால் 2012ஆம் வருடத்திற்கான ரூபா. 8,626,436 இற்கு நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளமுடியாது.<br><br>2011ம் வருடத்திற்கான பொருட்கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | 2011ம் வருடத்திற்கான பொருட்கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

| நிதிக் கூற்றின் விளைவு | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | கணக்காய்வாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | எடுத்த நடவடிக்கையும், தற்போதைய நிலையும், அபிவிருத்திகளும் |
|---|---|---|---|
| <u>5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு</u> | 2003 யூன் 02 ஆந் திகதிய பீ௩டீ 12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 5.2.1 இன் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன், பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே 42 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடானது பயனள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ப.மா.ஆணைக்கு எவ்வேளையும் முகாமைத்துவ குழுவின் அறிவுறுத்தலாக பாதீட்டைப் பயன்படுத்துகின்றது. . | |
| <u>6. முறைமைகளும் கட்டுப்பாடும்</u> | கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும், கட்டுப்பாடுகளினதும். குறைபாடுகள் அவ்வவ்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.<br><br>(அ) கணக்கீடு<br>(ஆ) மூலதன மானியங்களைப் பயன்படுத்தல்<br>(இ) ஊழியர் ஆட்சேர்ப்பு | ப.மா. ஆணைக்குழு அதன் முறைமையை பகுப்பாய்வு செய்வதுடன், நேரத்திற்கு நேரம் கட்டுப்பாட்டையும் தொடர்ந்து மேற்கொள்கின்றது. முறைமையையும், கட்டுப்படுத்தலையும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. . | |

## பல்கலைக்கழகங்களின் ஓய்வூதிய நிதியம்
## 2012 டிசெம்பர் 31ல் கணக்கு நிலைக் கூற்று

| | 2012 | 2011 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| **நடைமுறையில்லாச் சொத்துக்கள்** | | |
| **முதலீடுகள்** | | |
| திறைசேரி முறிகள் | 550,129,273 | 601,477,514 |
| நிலையான வைப்புக்கள் | 1,898,828,833 | 1,399,000,000 |
| | 2,448,958,106 | 2,000,477,514 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| பெறவேண்டியப பங்களிப்புக்கள் | 54,476,918 | 16,013,582 |
| பெறவேண்டிய முதலீட்டு வருமானங்கள் | 250,377,117 | 234,842,312 |
| குறுங்கால வைப்புக்கள் (Repos) | 5,000,000 | - |
| காசும், காசிற்குச் சமமானவைகளும் | 1,298,524 | 6,929,521 |
| | 311,152,559 | 257,785,415 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 2,760,110,665 | 2,258,262,929 |
| பிரதிநிதிப் படுத்துபவைகள் | | |
| **உறுப்பினர்களின் நிதியும், ஒதுக்கங்களும்** | | |
| பங்களிப்போரின் நிதியம் | 2,432,210,621 | 1,957,687,424 |
| ஓய்வூதிய நிதியம் | 78,674,647 | 76,114,209 |
| திரட்டிய மீதி | 220,253,446 | 201,906,600 |
| | 2,731,138,714 | 2,235,708,233 |
| **நடைமுறை பரிப்புக்கள** | | |
| அட்டுறு கடன்கொடுத்தோர் | 138,000 | 105,000 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 24,374,301 | 20,051,910 |
| உறுப்பினர்களுக்கு செலுத்த வேண்டியவை | 4,395,380 | 2,397,786 |
| ப.க. & உ.க.நி செலுத்தவேண்டியவை | 64,270 | - |
| | 28,971,951 | 22,554,696 |
| **மொத்ப் பரிப்புக்கள்** | 2,760,110,665 | 2,258,262,929 |

ஒப்பம். திஸ்ஸ நந்தசேன
செயலாளர்

ஒப்பம். உபயகுலா ரணவீர
கணக்காளர்

## பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்
## 2012 டிசெம்பர் 31ல் முடிவடைந்த வருடத்திற்கான நிதி செயற்றிறன் கூற்று

| | | 2012 | 2011 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| வருமானம் | | | |
| முதலீட்டு வருமானம் | | 235,596,188 | 224,093,091 |
| கழி: | வருமான வரி | 20,113,517 | 18,661,713 |
| | | 215,482,671 | 205,431,378 |
| கழி: | செலவீனம் | | |
| | பங்களிப்போரின் நிதிய வட்டி | 189,115,287 | 138,335,257 |
| | ஓய்வூதிய நிதிய வட்டி | 6,153,684 | 4,583,812 |
| | ஓய்வூதிய நிதிய சீராக்கல்கள் | 1,755,904 | 1,303,638 |
| | அட்டுறு செலவுகள் | 100,200 | 45,704 |
| | வங்கி கட்டணங்கள் | 10,750 | 11,568 |
| | | 197,135,825 | 144,279,979 |
| | செலவீனத்திற்கு மேலான வருமானம் | 18,346,846 | 61,151,399 |
| | கடந்த வருட மீதி மு/கொ | 201,906,600 | 140,755,201 |
| | ஐந்தொகைக்கு மாற்றிய மீதி | **220,253,446** | **201,906,600** |

## 2012 டிசெம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றங்கள் கூற்று

| | திரட்டிய நிதியம் (ருபா.) | ஓய்வூதிய நதியம் (ருபா.) | புங்களிப்போரின் நிதியம் (ருபா.) | மோத்தம் (ருபா.) |
|---|---|---|---|---|
| 2010 டிசெம்பர் 31ல் மீதி | 140,755,201 | 59,972,666 | 1,632,516,673 | 1,833,244,540 |
| 2011 வருட மிகை | 61,151,399 | | | 61,151,399 |
| பிழையான பங்களிப்பிலிருந்து பெறப்பட்ட வட்டி | | | 26,694 | 26,694 |
| நடைமுறை வருட வருமானத்திலிருந்து மாற்றம | | 1,303,638 | | 1,303,638 |
| ஓய்வூதியம் பெறுவோரின் கணக்கிலிருந்து பெறப்பட்ட பங்களிப்பு | | 157,698 | | 157,698 |
| நடப்பு வருட பங்களிப்பு | | | 222,020,068 | 222,020,068 |
| மீள் செலுத்திய முழுத்தொகை | | | (7,798,240) | (7,798,240) |
| பங்களிப்போர் நிதியம்/ ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றம் | | 26,963,680 | (26,963,680) | - |
| ப.ஓ.நி. கணக்கிற்கு மாற்றம் | | | (449,347) | (449,347) |
| 2011ல் ஓய்வூதிய கொடுப்பனவு | | (16,867,284) | | (16,867,284) |
| ஓய்வூதிய நிதியம்/ பங்களிப்பு நிதியம் வட்டி | | 4,583,812 | 138,335,256 | 142,919,068 |
| 2011 டிசெம்பர் 31ல் மீதி | 201,906,600 | 76,114,210 | 1,957,687,424 | 2,235,708,234 |
| 2012 வருடத்திற்கான மிகை | 18,346,846 | | | 18,346,846 |
| நடப்பு வருட வருமானத்திலிருந்து மாற்றம் | | 1,755,904 | | 1,755,904 |
| பிழையான பங்களிப்பின் திருத்தம் | | | (1,136) | (1,136) |
| நடப்பு வருட பங்களிப்பு | | | 317,109,810 | 317,109,810 |
| முழுத்தொகை மீள் செலுத்தியது | | | (17,744,027) | (17,744,027) |
| பங்களிப்பு நிதியம்/ ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றம் | | 12,145,935 | (12,145,935) | - |
| ப.ஓ.நி கணக்கிற்கு மாற்றம் | | | (1,810,802) | (1,810,802) |
| வருடத்தின் போது ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | | (17,495,086) | | (17,495,086) |
| ஓய்வூதிய நிதியம்/ பங்களிப்பு நிதியம் வட்டி | | 6,153,684 | 189,115,287 | 195,268,971 |
| **2012 டிசெம்பர் 31ல் மீதி** | **220,253,446** | **78,674,647** | **2,432,210,621** | **2,731,138,714** |

## பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்

## 2012 டிசெம்பர் 31காலத்திற்கான காசுப் பாய்ச்சு கூறு

| | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல் | | |
| செயற்பாட்டு மிகை/(பற்றாக்குறை) | **18,346,846** | **61,151,399** |
| சீராக்கல் | | |
| முதலீட்டு வருமானம் | (235,596,188) | (224,093,091) |
| செயற்பாட்டு மிகை/(பற்றாக்குறை) | **(217,249,342)** | **(162,941,692)** |
| தொழிலற்படு மூலதனத்தில் மாற்றம் | | |
| பெறக்கூடிய பங்களிப்பின் (அதிகரிப்பு)/குறைவு | (38,463,336) | (7,870,860) |
| பெறக்கூடிய வட்டியின் (அதிகரிப்பு)/குறைவு | (15,534,805) | (75,975,507) |
| குறுங்கால வைப்பீடகளில் (அதிகரிப்பு)/குறைவு | (5,000,000) | 25,000,000 |
| அட்டுறு கடன்கொடுநரின் (குறைவு)/ அதிகரிப்பு | 33,000 | (13,239) |
| செலுத்த வேண்டிய வருமான வரியின்(குறைவு)/ அதிகரிப்பு | 4,322,391 | 3,035,732 |
| உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு (குறைவு)/ அதிகரிப்பு | 1,997,594 | 288,789 |
| ப.க. & உ.க.நி கொடுப்பனவு (குறைவு)/ அதிகரிப்பு | 64,270 | - |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சு | **(269,830,228)** | **(218,476,777)** |
| நிதியிடல் நடவடிக்ககைகளிலிருந்து காசுப் பாய்ச்சல் | | |
| உறுப்பினர், ஓய்வூதிய நிதியத்தின் அதிகரிப்பு | 477,083,635 | 341,286,337 |
| நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல் | **477,083,635** | **341,286,337** |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல் | | |
| திறைசேரி முறிகள் கொள்வனவு | 51,348,241 | 5,913,269 |
| நிலையான வைப்புக்கள் கொள்வனவு | (499,828,833) | (352,000,000) |
| முதலீட்டு வருமானம் | 235,596,188 | 224,093,091 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல் | **(212,884,404)** | **(121,993,640)** |
| தேறிய காசுப் பாய்ச்சல | (5,630,997) | 815,920 |
| 01-01-2012ல் காசு | 6,929,521 | 6,113,601 |
| 31-12-2012ல் காசு | **1,298,524** | **6,929,521** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல
My No ஈசீ/பீ/பீஎன்எப்/எப்ஏ/2012

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date 2013 ஒக்டோபர் 23

தலைவர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பல்கலைக்கழகங்கள் ஒய்வூதிய நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை அரச, துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථන / தொலைபேசி / Telephone 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 2.2.1 பெறவேண்டிய கணக்குகள்

2012 ஏப்ரல் முதல் திசெம்பர் வரை பல்கலைக்கழகங்களில் இருந்து விபரம் பெற்றுக்கொள்ளப்பட்டு ஓய்வூதிய நிதியத்திற்கு சேமலாப நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படிக்காக ரூபா 32,137,660 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமைகள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| (அ) | 1999 ஏப்ரல் 09 ஆம் திகதிய அப/99/0438/11/033 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், உத்தியோகத்தர்கள் தொடர்பாக பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட 25 சதவீத பணத்தில் 10 சதவீதம் ஓய்வூதிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்படவேண்டும். எவ்வாறெனினும் 1999 யூன் 10 ஆம் திகதிய 747 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் படி தொழில்கொள்வோனால் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் 15 சதவீத பங்களிப்பில் 8/15 அளவினை ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை தொடர்பாக 2013 மார்ச் 07 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போது இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 97 ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டின் போது ஓய்வூதிய நிதியத்தில் முறையே ரூபா 207,724,261 தொகை மற்றும் ரூபா 197,135,825 தொகையான வருமானமும் செலவுகளும் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதியத்தை முறைப்படுத்துவது, நிர்வகிப்பது மற்றும் அதன் முகாமைத்தவத்திற்காக ஆணைக்குழுவால் நடைமுறைவிதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | தொழில் ஆணையாளரின் 2005 சனவரி 28 ஆம் திகதிய ப/நிறுவனம்/2004 ஆம் இலக்கக் கடிதம் | 2011 மார்ச் 23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது திறைசேரி இணக்கப்பாட்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கல்விசார் படிகள், மொத்த உழைப்பு ஆகிய வரைவிலக்கணத்திற்குள் உள்ளடக்கப்பட்டு 2013 சனவரி 08 ஆம் திகதிய 1000 ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்தது. மேற்குறித்த சுற்றறிக்கை வழங்கப்படுவதற்கு முன்னர் கல்விசார் படிகள் உள்ளடக்கப்பட்ட காரணத்தால் ஓய்வூதிய |

| | | |
|---|---|---|
| | | நிதியத்திற்கு மேலதிகமாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 248.57 மில்லியன் தொகையைத் தீர்த்துவைப்பதற்கு அல்லது முறையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு 2012 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1999 யூன் 10 ஆம் திகதிய 747 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை | ஒய்வூதிய முறைமை ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பிடப்படுவதற்கு உட்பட்டு புதிய அங்கத்தவர்களின் பங்களிப்பு/ நலன்களின் கொடுப்பனவுகள் அவதானிக்கப்பட்ட போதிலும் அம் மதிப்பீடுகள் 2008 திசெம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் மிகை, ரூபா 10,588,436 தொகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 61,151,399 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 50,562,963 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முதலீட்டு வருமானம் ரூபா 3,744,687 தொகையால் அதிகரித்திருக்கையில் அங்கத்துவ மற்றும் ஓய்வூதியக் கணக்குகளுக்காக வட்டிக் கொடுப்பனவுகள் முறையே ரூபா 50,780,030 தொகையாலும் ரூபா 1,569,872 தொகையாலும் அதிகரித்தமை ஓய்வூதிய நிதியச் சீராக்கம் ரூபா 452,266 ஆல் அதிகரித்தமை போன்ற விடயங்கள் அவ்வீழ்ச்சி தொடர்பாக விசேடமாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 50,562,963 ஆல் அல்லது 83 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. பிரதான வருமானம் மற்றும் செலவின முரண்கள் பின்வருமாறாகும்.

| | 2012 | 2011 | முரண்கள் | முரண்களின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
